தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நேந்திரன் வாழை விலை நிலையாக இருக்கும்: தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

நேந்திரன் வாழையின் விலை நிலையாக இருக்கும் என தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

பழவகைகளில் எல்லாக் காலங்களிலும் கிடைக்கும் பழங்களில் வாழைப் பழம் முக்கியத்துவம் பெறுகிறது. இந்தியாவில் கடந்த 5 ஆண்டுகளில் வாழையின் பரப்பு மற்றும் உற்பத்தி கணிசமான அளவு அதிகரித்துள்ளது. கடந்த 2005-06-ஆம் ஆண்டுகளில் 5.69 லட்சம் ஹக்டரில் இருந்து 2011-12-ஆம் ஆண்டுகளில் 8.16 லட்சம் ஹக்டராக அதிகரித்துள்ளது.இதே போல வாழை உற்பத்தி 188.87 லட்சம் டன்னில் இருந்து 296.67 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அதே போல உற்பத்தி திறன் ஒரு ஹக்டருக்கு 33.1 டன்னிலிருந்து 36.3 டன்னாக அதிகரித்துள்ளது. உலக அளவில் இந்தியாவின் ஏற்றுமதி பங்கு .17 சதவீதம் ஆகும்.இந்தியாவில் 82.53 லட்சம் டன் வாழை உற்பத்தி செய்து தமிழகம் முதலிடம் வகுக்கிறது. தமிழகத்தில் நேந்திரன் வாழை முக்கிய ரகங்களில் ஒன்றாக உள்ளது. கோவை, ஈரோடு, திருச்சி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களீல் நேந்திரன் அதிகமாகப் பயிரிடப்படுகிறது.இதில் வாழை சிப்ஸ் தயாரிப்பதற்கு நேந்திரன் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் விளையும் நேந்திரன் பழங்களுக்கு கேரள மாநிலத்தில் நல்ல வரவேற்பு உள்ளது. ஒரு வாழைத் தார் சராசரியாக 8 முதல் 12 கிலோ வரை எடை கொண்டுள்ளது. ஏப்ரல்-மே மற்றும் அக்டோபர்-நவம்பர் ஆகிய மாதங்களில் நேந்திரன் நடவு செய்யப்பபடுகிறது.இதில் ஜனவரி-பிப்ரவரியில் அதிகமான வரத்துக்கள் இருக்கும். அதே நேரத்தில் ஜூலை-ஆகஸ்ட் மாதங்களில் வரத்து குறைவாக இருக்கும். தற்போது நேந்திரன் வாழையின் சந்தை விலை கிலோவிற்கு ரூ.38 ஆகும். இவ்விலை தரம் மற்றும் இதர பண்புகளை பொறுத்து

மாறுபடும்.வரும் மாதங்களில் அறுவடை விலைகளை பற்றி விவசாயிகள் விழிப்புடன் செயல்பட கோவையில் உள்ள உழவர் சந்தைகளில் கடந்த பத்து ஆண்டுகளாக நிலவிய நேந்திரன் விலையை வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் சார்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.அதன்படி டிசம்பர் மாதத்தில் நேர்த்திரன் வாழையின் விலை கிலோவிற்கு ரூ.36-இல் இருந்து ரூ.38-ஆக இருக்கும். மேலும் 2014 ஜனவரி மாதங்களில் பண்டிகை காலம் என்பதால் நேந்திரன் வாழையின் விலை கிலோவிற்கு ரூ.1 முதல் ரூ.2 வரை அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு 0422-2431405, 6611269 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

### பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 64.60 அடி

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை நிலவரபடி 64.60 அடியாக இருந்தது. அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 1,035 கன அடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 400 கன அடி நீரும், வாய்க்காலில் 1,900 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 8.84 டி.எம்.சி.

### எலுமிச்சை சாகுபடிக்கு ஏற்றமிகு காலம்!



எலுமிச்சை சாகுபடி செய்ய விரும்பும் விவசாயிகள் டிசம்பர் முதல் பிப்ரவரி வரையிலான காலத்தில் தொடங்கினால் விளைச்சலிலும், வருமானத்திலும் ஏற்றம் பெறலாம்.

எலுமிச்சை சிறப்புகள்: எலுமிச்சையில் அதிக அளவில் வைட்டமின் சி உள்ளது. உடலுக்கும், மனதுக்கும் ஒருங்கே புத்துணர்ச்சி தருகிறது. கோடையில் குளிர்ச்சி தரும் பானம் தயாரிக்கவும், உணவுக்கு ருசி கூட்டும் ஊறுகாய் தயாரிக்கவும் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது.

சாகுபடி: பி.கே.எம். 1 ரகத்தை தேர்வு செய்யலாம். வடிகால் வசதியுள்ள வண்டல் மண் சிறந்தது. டிசம்பர் முதல் பிப்ரவரி வரையிலும், ஜூன் முதல் செப்டம்பர்

வரையிலும் நடவுக் காலமாகும். வரிசைக்கு வரிசை 5 மீட்டர், செடிக்குச் செடி 5 மீட்டர் இடைவெளிவிட்டு நடவு செய்ய வேண்டும். இரண்டரை அடிக்கு, இரண்டரை அடி என்ற அளவில் குழி எடுக்க வேண்டும். நடவு செய்ததும் நீர்ப்பாய்ச்ச வேண்டும். மூன்றாம் நாள் உயிர்தண்ணீர் விடவேண்டும். பின்னர், தேவைக்கேற்ப 7 முதல் 10 நாள்களுக்கு ஒருமுறை நீர்ப்பாய்ச்சலாம். தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சொட்டுநீர்ப் பாசனம் அமைப்பது சிறந்தது.

உர அளவு: நடவு செய்யும்போது குழிக்கு 10 கிலோ தொழு உரம், 250 கிராம் வேப்பம்புண்ணாக்கு இட்டு நடவு செய்யலாம். ஓராண்டு வயது மரத்துக்கு 10 கிலோ தொழு உரம், 450 கிராம் யூரியா, 600 கிராம் சூப்பர் பாஸ்பேட், 160 கிராம் பொட்டாஷ் ஆகிய ரசாயன உரங்களை இட வேண்டும். ஒவ்வோர் ஆண்டும் மரத்துக்கு 5 கிலோ தொழு உரம், 220 கிராம் யூரியா, 150 கிராம் சூப்பர் பாஸ்பேட், 70 கிராம் பொட்டாஷ் உரங்களை அதிகரித்துக்கொண்டே வர வேண்டும். ஆறாம் ஆண்டுமுதல் ஒரு மரத்துக்கு ஆண்டுக்கு 30 கிலோ தொழு உரம், 1,350 கிராம் யூரியா, 1,250 கிராம் சூப்பர் பாஸ்பேட், 500 கிராம் பொட்டாஷ் வழங்க வேண்டும். யூரியாவை மார்ச் மாதமும், அக்டோபர் மாதமும் பாதிப் பாதியாகப் பிரித்து இட வேண்டும். தொழு உரம், சூப்பர் பாஸ்பேட், பொட்டாஷ் ஆகியவற்றை அக்டோபரில் மட்டும் இட வேண்டும்.

100 லிட்டர் தண்ணீருக்கு 500 கிராம் சிங் சல்பேட் கலந்து மார்ச், ஜூலை, அக்டோபர் என ஆண்டுக்கு மூன்று முறை புதுத் தளிர் வந்ததும் தெளிக்க வேண்டும்.

பின்செய் நேர்த்தி: நிலத்தில் இருந்து ஒன்றரை அடி உயரம் வரை உள்ள கிளைகளை அகற்ற வேண்டும். ஒவ்வொரு மரத்துக்கும் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை 30 கிலோ பசுந்தழைகள் இட வேண்டும். காய்ப்பு தொடங்கும் வரை பயறு வகைகள், காய்கறிகளை ஊடுபயிராகச் சாகுபடி செய்யலாம்.

வளர்ச்சி ஊக்கிகள்: பழம் பிடிப்பதை அதிகரிக்க 2-4 டி வளர்ச்சி ஊக்கியை பூக்கும் தருணத்தில் 100 லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்க

வேண்டும். பழம் உருவான பிறகு உதிராமல் இருக்க நாப்தலின் அசிடிக் அமிலம் 3 கிராமை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கலாம்.

இத்தகைய நடைமுறைகளைப் பின்பற்றும் எலுமிச்சை சாகுபடியாளர்களுக்கு உயர்மகசூலும், உன்னத லாபமும் கிடைப்பது உறுதி. மேலும் விவரங்களுக்கு அருகில் உள்ள தோட்டக்கலைத் துறை அலுவலகங்களைத் தொடர்புகொள்ளலாம்.

**கனமழை: கடலூர் மாவட்டத்தில் பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிப்பு**

வங்க கடலில் உருவான மாதிபுயல் காரணமாக பெய்துவரும் மழையால் கடலூர் மாவட்டத்தில் இன்று ஒரு நாள் பள்ளிகளுக்கு விடுமுறை. அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்ட ஆட்சியர் இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார். மேலும் திட்டமிட்ட படி 10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 வகுப்புகளுக்கான அரையாண்டு தேர்வுகள் நடக்கும் என்றும் அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளின் பிரச்னையை தீர்ப்பதில் காங்கிரஸ் அரசுக்கு அக்கறையில்லை: முன்னாள் பிரதமர் தேவகௌடா**

விவசாயிகளின் பிரச்னையை தீர்ப்பதில் காங்கிரஸ் அரசுக்கு அக்கறையில்லை என்று முன்னாள் பிரதமர் தேவகௌடா தெரிவித்தார்.

இது குறித்து பெங்களூருவில் வியாழக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது: மாநிலத்தில் விவசாயிகள் சங்கடத்தில் உள்ளனர். உரம், விதை, பூச்சிக்கொல்லி மருந்துகள் கிடைக்காமல் அவதிக்குள்ளாகியுள்ளனர். அதன் விலைகளும் விண்ணளவு உயர்ந்துள்ளது. விவசாயிகளின் பிரச்னைகளை தீர்க்காமல் அரசு வேடிக்கை பார்ப்பது சரியல்ல. விவசாயிகளின் பிரச்னையை தீர்ப்பதில் அக்கறையில்லாத அரசு, தங்கள் கட்சியினரின் தேவையை பூர்த்தி செய்வதில் ஆர்வம் கொண்டுள்ளது என்றார்.

மேலும் வரும் மக்களவை தேர்தலில் கர்நாடகத்தில் காங்கிரஸ் 22 தொகுதிகளை கைப்பற்றும் என்று அக்கட்சியினர் கூறி வருகின்றனர். காரணம் ஆட்சி பொறுப்பை ஏற்றபின்னர் அன்னபாக்யா திட்டம், பள்ளி மாணவர்களுக்கு இலவச பால் வழங்கும் திட்டம், விவசாயிகளின் கடன் தள்ளுபடி ஆகியவற்றால் மக்கள்

தங்களை ஆதரிப்பார்கள் என்று அக்கட்சியினர் தவறாக கணக்கு போட்டு செயல்பட்டு வருகின்றனர். அண்மையின் தேர்தல் நடந்த 5 மாநிலங்களிலும் இலவச அரிசி, இலவச மின்சாரம் உள்ளிட்ட பல்வேறு இலவச திட்டங்களை அறிவித்தும் அங்கு காங்கிரஸ் தோல்வியை தழுவி உள்ளது. நடந்து முடிந்த தேர்தலில் காங்கிரஸ் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். மாநில கட்சிகளை அழிக்க முயன்றால் அதன் விளைவுகள் இப்படித்தான் இருக்கும். புதுதில்லையில் நான் மீண்டும் பிரதமராக விரும்புவதாக, என்னை சித்தராமையா கிண்டல் செய்துள்ளார். எனக்கு பிரதமர் ஆகும் எண்ணமில்லை. என்றாலும் அவர் கூறியதை சவாலாக ஏற்று, மீண்டும் மாநிலத்தில் மஜத ஆட்சியை பிடிப்பதற்கான பணியில் ஈடுபட உள்ளேன் என்றார் அவர்.

**கனமழை: விழுப்புரம் மாவாட்ட பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அறிவிப்பு**

விழுப்புரம் மாவட்டத்தில் பெய்துவரும் கனமழை காரணமாக மாவட்டத்தில் அனைத்து பள்ளிகளுக்கும்  விடுமுறை. அறிவிக்கப்பட்டுள்ளது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் இதற்கான அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.  மேலும் 10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 வகுப்புகளுக்கு அரையாண்டு தேர்வுகள் திட்டமிட்டபடி நடக்கும் என்றும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் வங்ககடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலமானது தமிழகத்தின் கடலோர மாவட்டங்களான தொண்டி மற்றும் நாகப்பட்டினத்தில் கரையை கடந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

**கனமழை: புதுச்சேரியில் பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிப்பு**

வங்க கடலில் உருவான மாதி புயல் வலுவிழந்து குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலாமாக உருவெடுத்ததை அடுத்து தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கன மழை பெய்கிறது. இதனால் புதுச்சேரியில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை தொடரும் என வானிலை அறிக்கை தெரிவித்துள்ளது.

**வேதாரண்யம் அருகே காற்றழுத்தத் தாழ்வு பகுதி கடலோர மாவட்டங்களில் கன மழை வாய்ப்பு**

வங்கக் கடலில் உருவான மாதி புயல் வலுவிழந்து தீவிர காற்றழுத்தத் தாழ்வு பகுதியாக மாறியுள்ளது. வியாழக்கிழமை (டிச.12) இரவு நிலவரப்படி தாழ்வுப் பகுதி வேதாரண்யத்துக்கு 20 கிலோ மீட்டர் தொலைவில் நிலை கொண்டிருந்தது.

அது வெள்ளிக்கிழமை (டிச.13) காலைக்குள் அதிராமப்பட்டினம் - பாம்பன் இடையே கரையைக் கடக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் காரணமாக தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் வெள்ளிக்கிழமை கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. மாநிலத்தின் உள்மாவட்டங்களிலும் ஆங்காங்கே மழை பெய்யலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

**இது குறித்து வானிலை மைய அதிகாரிகள் கூறியதாவது:**

தென்மேற்கு வங்கக் கடலில் அண்மையில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம், மாதி புயலாக மாறியது. இந்தப் புயல் தற்போது தீவிர காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியாக வலுவிழந்து வேதாரண்யம் அருகே நிலை கொண்டுள்ளது. தாழ்வுப் பகுதி கரையைக் கடக்கும்போது 45-இலிருந்து 55 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும். கடலோர மாவட்டங்களில் கனமழையை எதிர்பார்க்கலாம். காற்றழுத்தத் தாழ்வுப் பகுதியைக் குறிக்கும் எச்சரிக்கைக் கூண்டுகள் சென்னை, கடலூர், நாகப்பட்டினம், எண்ணூர், காட்டுப்பள்ளி, பாம்பன், தூத்துக்குடி, புதுச்சேரி துறைமுகங்களில் ஏற்றப்பட்டுள்ளன. எச்சரிக்கை: காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி கரையைக் கடக்கும்போது கடலுக்குள் 60 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீச வாய்ப்புள்ளதால் மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்பட்டுள்ளனர். கடலோர மாவட்டங்களில் பலத்த மழை இருக்கும். சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில இடங்களில் மழை பெய்ய ய்ப்புள்ளது.வியாழக்கிழமை காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): கல்பாக்கம், நாகப்பட்டினம்.

## வேளாண் வரைவு ஒப்பந்தம்: வேளாண் துறையினர் ஏற்றுமதியாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும்

உலக வர்த்தக அமைப்பின் வேளாண் வரைவு ஒப்பந்தம், வேளாண் துறையினர், ஏற்றுமதியாளர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையில் உள்ளது என்று தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து சங்கத்தின் முதுநிலைத் தலைவர் எஸ்.ரத்தினவேல், தலைவர் என்.ஜெகதீசன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை: இந்தோனேஷியாவில் உள்ள பாலி தீவில் நடைபெற்ற உலக வர்த்தக ஒப்பந்த நாடுகளின் அமைச்சர்கள் கூட்டத்தில் இந்தியா சமர்ப்பித்த வரைவு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது முக்கியத்துவம் வாய்ந்தது. உணவுப் பாதுகாப்புத் திட்டங்கள் முழுமையாகச் செயல்படும் வரை மானியக் கட்டுப்பாட்டை முழுமையாகக் கைவிட வேண்டும் என வளரும் நாடுகள் சார்பில் மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சர் ஆனந்த் சர்மா வலியுறுத்தியுள்ளார். இதன் காரணமாக, வளர்ந்து வரும் நாடுகள் விவசாய மானியங்களைத் தொடரவும் தங்களுக்குத் தேவையான அளவு தானியங்களை கையிருப்பு வைத்திருக்கவும் 159 நாடுகள் கையெழுத்திட்டுள்ள ஒப்பந்தத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. நமது நாட்டின் சிறு, நடுத்தரத் தொழிற்சாலைகளின் உற்பத்திப் பொருள்கள் ஏற்றுமதி உத்வேகம் பெறும் வகையில், இந்த வரைவு ஒப்பந்தத்தில் அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதன் காரணமாக வெளிநாட்டுச் சந்தைகளில் அவற்றை வணிகம் செய்திட வாய்ப்புகள் ஏற்படும். சர்வதேச தரநிர்ணயம், ஒற்றைச்சாளர முறை, அழுகும் பொருள்கள் விரைவாக அனுப்புதல் போன்றவற்றை நடைமுறைப்படுத்த ஊக்கமும், காலஅவகாசமும் அளிக்கப்பட்டிருப்பது இந்த ஒப்பந்தத்தின் சிறப்பு அம்சமாகும். வர்த்தகத்தைத் தடையின்றி நடத்த குழு ஏற்படுத்தப்பட்டிருப்பதும், இக் குழுவிடம் உறுப்பினர் நாடுகள் தேவையான ஆலோசனைகள், வழிகாட்டுதல்களைப் பெற அனுமதிக்கப்பட்டிருப்பது பன்னாட்டு வர்த்தகம் பெருக வழிவகுக்கும். ஒட்டுமொத்தத்தில் இந்த ஒப்பந்தத்தினால் இந்தியா மட்டுமின்றி உலகளவில் வேளாண் பெருமக்களும், நுகர்வோரும் மிகுந்த பயன் அடைவர் எனத் தெரிவித்துள்ளனர்.

**விளைநிலங்களில் ரசாயன உரங்கள் பயன்பாடுத்துவதால் மூலிகைச் செடிகள் அழிந்து வருகிறது: ஆயுர்வேத மையத்தின் இயக்குநர் சரஸ்வதி**

விளைநிலங்களில் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டும் என்பதற்காக பயிரிடுவதற்கு முன்னும், பின்னும் ரசாயன உரங்களை பயன்படுத்துவதால் மூலிகை செடிகள் அழிந்து வருவதாக மத்திய அரசின் ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் சரஸ்வதி தெரிவித்தார்.

விருதுநகர் செந்திக்குமார நாடார் கல்லூரியில் தேசிய மூலிகை தாவரவியல் மற்றும் மூலிகை பொருள்கள் குறித்த சித்த மருத்துவர்கள் மாநாடு வியாழக்கிழமை நடைபெற்றது. இக்கல்லூரி வளாகத்தில் நடந்த மாநாட்டிற்கு செயலாளர் எஸ்.பி.மாதவன் தலைமை வகித்தார். முதல்வர் சுந்தரபாண்டியன் முன்னிலை வகித்தார். இதில், சிறப்பு விருந்தினராக மத்திய அரசின் கேப்டன் சீனிவாசமூர்த்தி ஆயுர்வேத ஆராய்ச்சி நிறுவனத்தின் இயக்குநர் சரஸ்வதி மாநாட்டை தொடங்கி வைத்து பேசியதாவது: சித்தா ஆயுர்வேதம் மருத்துவம் தான் ஆரம்ப காலத்தில் பொதுமக்கள் பயன்படுத்தி வந்தனர். நாளடைவில் மேற்கத்திய கலாச்சார மோகத்தின் காரணமாக அலோபதி மருத்துவத்திற்கு மாறியதால் குறைந்தது.

இதை மீண்டும் கொண்டு வரவும், பல்வேறு வகையான மூலிகைச் செடிகளை பாதுகாக்கவும் மத்திய சுகாதாரத் துறை மூலம் ஆயுர்வேதம், சித்தா மற்றும் யுனானி மருத்துவ பிரிவு கொண்டு வரப்பட்டது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ரூ.500 கோடி வரையில் ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், மூலிகைச் செடிகளில் இருந்து அவுரி, நித்தியகல்யாணி, கொண்டமுளி, கீழநெல்லி, கற்றாலை ஆகியவைகளில் மதிப்பூட்டப்பட்ட ஆயுர்வேத பொருள்கள் தயார் செய்யப்படுகிறது. குறிப்பாக நித்திய கல்யாணி செடி மூலம் புற்று நோய்க்கான மருந்துகள் தயார் செய்யப்படுகிறது. இந்தியாவில் மொத்தம் 46 ஆயிரம் வகையான மூலிகை தாவரங்கள் உள்ளது.அதில், 7500 மூலிகைச் செடிகள் பயன்பாட்டில் இருப்பதோடு, கண்டறியப்படாமல் நிறைய உள்ளது. சென்னையில் உள்ள மருந்து ஆய்வகத்தின் மூலம் மூலிகையிலிருந்து தயார் செய்யப்படும் மருந்து வகைகளுக்கு சான்றிதழ் அளிக்கப்படுகிறது. இதுவரையில் 600 வகையான மூலிகைச் செடிகளை

எந்தெந்த தரத்தில் உபயோகிப்பது என சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது. தற்போது, விவசாய உணவு பயிர்களில் ரசாயன உரங்கள் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. இதை உட்கொள்வதால் பக்க விளைவுகள் வருவதோடு, விளைநிலங்களும் மலட்டுத் தன்மை அடைந்து வருகிறது. களைக்கொல்லி போன்ற மருந்துகளால் விளைநிலத்தில் மூலிகைச் செடிகளும் அழிந்து வருகிறது.

இது போன்ற விளைவுகளை தவிர்ப்பதற்காக பொதுமக்கள் இயற்கையான முறையில் உணவு பொருள்களை உற்பத்தி செய்ய தொடங்கியுள்ளனர். சித்தா, ஆயுர்வேதம் மருத்துவத்தையும் விரும்புகின்றனர். மூலிகைச் செடிகளான நெல்லிக்காய், கிடாமஞ்சள், நித்திய கல்யாணி ஆகிய பயிர்களை தனியார் நிலங்களில் உற்பத்தி செய்வதற்கு மானியமும் வழங்குவதாக அவர் தெரிவித்தார்.

இதில், தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்து 240 சித்த மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சி மாணவர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தேசிய சித்தா பயிற்சி மையத்தின் மூலிகை செடிகள் துறையின் பேராசிரியர் அரவிந்த், கால்நடை மருத்துவ கல்லூரி ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் ரங்கநாதன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை இக்கல்லூரியின் விலங்கியல் துறையின் தலைவர் மேகலிங்கம் உள்ளிட்ட நிர்வாகத்தினர் செய்திருந்தனர்.

### முகூர்த்தம் சீசன்: பூக்களின் விலை பல மடங்கு உயர்வு

முகூர்த்தம் மற்றும் ஐயப்ப சீசன் காரணமாக தருமபுரி மாவட்டத்தில் இதுவரையில் இல்லாத அளவில் பூக்களின் விலை பலமடங்கு அதிகரித்துள்ளது.

தருமபுரி புதிய பேருந்து நிலையப் பகுதியில் உள்ள பூக்கள் மொத்த கடைகளுக்கு தொப்பூர், முத்தம்பட்டி, பொம்மிடி, கடத்தூர், பாலக்கோடு, பெல்ராம்பட்டி உள்ளிட்ட மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் இருந்து தினந்தோறும் அதிகளவில் பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கிருந்து சில்லரை விற்பனையாளர்கள் தேவைக்கேற்ப பூக்களை வாங்கி சென்று கட்டி வியாபாரம் செய்கின்றனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் கிலோ சாமந்தி அதிகபட்சமாக ரூ.30 வரையிலும், மல்லி ரூ.200க்கும் விற்பனையாகி வந்த நிலையில், வியாழக்கிழமை ஒரு கிலோ மல்லி ரூ.500க்கும், காக்கா மல்லி ரூ.250, லில்லி ரூ.100, சாமந்தி கிலோ ரூ.70 முதல் ரூ.80க்கு விற்கப்பட்டது. முகூர்த்தம் மற்றும் ஐயப்ப சீசன் என்பதால் பூக்களின் விலை இதுவரையில் இல்லாத அளவிற்கு கடுமையாக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து தருமபுரி பூ வியாபாரி பி.ரவி கூறுகையில், மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் இருந்து அதிகளவில் பூக்களின் வரத்து இருந்த நிலையில் சீசன் இல்லாததால் தற்போது வரத்து கணிசமாக குறைந்துள்ளது. மேலும் முகூர்த்தம் மற்றும் ஐயப்ப சீசன் என்பதால் தேவைக்கு ஏற்ப வரத்து இல்லாததால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு இன்னும் சிலநாள்கள் நீடிக்கும் என்றார் அவர்.

**ஊத்தங்கரை பகுதியில் 2 பசுக்கள் சாவு**

கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை பகுதியில் கோமாரி நோய் தாக்குதலுக்கு இரு பசு மாடுகள் உயிரிழந்தன.ஊத்தங்கரை பகுதியில் கோமாரி நோயால் கடந்த 3 மாதங்களில் மட்டும் சுமார் 300-க்கும் மேற்பட்ட பசு மாடுகள் உயிரிழந்தன.

இந்த நோய் மேலும் பரவாமல் தடுக்கவும், நோயால் பாதிக்கப்பட்ட பசு மாடுகளைக் காக்கவும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் சிறப்பு மருத்துவ முகாம் அண்மையில் நடைபெற்றது.இருப்பினும், கோமாரி நோய்க்கு பசு மாடுகள் உயிரிழப்பது தொடர் கதையாகி வருகிறது.

ஊத்தங்கரையை அடுத்துள்ள படதாசம்பட்டியைச் சேர்ந்த வேடி, வண்டிக்காரன் கொட்டாயைச் சேர்ந்த பழனிசாமி ஆகியோரின் பசு மாடுகள் வியாழக்கிழமை உயிரிழந்தன.

உயிரிழந்த மாடுகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும்; கோமாரி நோயைக் கட்டுப்பட்டு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தக் கோரி ஆர்ப்பாட்டம்

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும், வேலை வாய்ப்பை அதிகரிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, சேலத்தில் பல்வேறு தொழிற்சங்கங்கள் சார்பில் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மத்திய அரசின் தொழிலாளர் விரோதப் போக்குகளைக் கண்டித்து தில்லியில் பல்வேறு தொழிற்சங்கங்கள் சார்பில் கண்டனப் பேரணி, கோரிக்கை முழக்கப் போராட்டம் ஆகியவை நடைபெறுகின்றன. இதை நாடு முழுவதும் மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக சி.ஐ.டி.யு., ஏ.ஐ.டி.யு.சி., ஏ.ஐ.யு.டி.சி., எல்.பி.எப். உள்ளிட்ட பல்வேறு தொழிற்சங்கங்கள் சார்பில் சேலம் தலைமைத் தபால் நிலையம் எதிரில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஏ.ஐ.டி.யு.சி. மாவட்டத் தலைவர் கே.ஏ.வேணுகோபால், ஐ.என்.டி.யு.சி. மாவட்டத் தலைவர் டி.வடமலை, சி.ஐ.டி.யு. மாவட்டச் செயலர் பி.உதயகுமார் உள்ளிட்டோர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், ஏ.ஐ.டி.யு. மாவட்ட பொதுச் செயலர் பி.பரமசிவம், முன்னாள் எம்.எல்.ஏ. பனைமரத்துப்பட்டி ராஜேந்திரன், சி.ஐ.டி.யு. நிர்வாகி ஆர்.வேங்கடபதி உள்ளிட்டோர் கோரிக்கை விளக்க உரையாற்றினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டும், வேலை வாய்ப்பை அதிகரிக்க வேண்டும். உழைக்கும் தொழிலாளர்கள் அனைவருக்கும் குறைந்தபட்ச ஊதியம் ரூ.10 ஆயிரம், ரூ.3 ஆயிரம் ஓய்வூதியம் வழங்க வேண்டும், ஒப்பந்தத் தொழிலாளர் முறையை ரத்து செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பப்பட்டன.

எச்.எம்.எஸ். மாநிலச் செயலர் சி.கோவிந்தன், எல்.பி.எப். மாவட்டச் செயலர் பழனி, ஏ.ஐ.சி.சி.டி.யு. மாவட்டத் தலைவர் கே.நடராஜன், ஏ.சந்திரமோகன், கணேசன் உள்ளிட்டோர் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

**காபி விளைச்சல், விலை குறைந்ததால் விவசாயிகள் கவலை**

ஏற்காடு, டிச. 12: ஏற்காட்டில் நிகழாண்டு காபி விளைச்சலும், விலையும் குறைந்ததால் காபி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் சுமார் 13,750 ஏக்கர் பரப்பளவில் 95 சதத்தும் மேற்பட்ட சிறு விவசாயிகள் காபியை சாகுபடி செய்கின்றனர். ஏற்காடு சேர்வராயன் மலையில் அரபிக்கா வகை காபி அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகிறது. காபி அறுவடை அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை நடைபெறுவதால், செடிகளில், காபி பழங்களைப் தொழிலாளர்கள் பறித்து வருகின்றனர்.

கடந்த ஆண்டை விட, நிகழாண்டில், காபிச் செடிகளில் விளைச்சல் குறைவாக உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

2012 -2013 ஆண்டு காபி மொத்த விளைச்சல் 3,100 டன் கிடைத்ததாகவும், நிகழாண்டு, ஏற்காடு மலையில் 500 ஹெக்டேர் பரப்பளவு காபி விவசாயம் அதிகரித்துள்ளதால் 3,700 டன் வரை காபி விளைச்சல் கிடைக்க வாய்ப்புள்ளதாக, காபி வாரியம் தெரிவித்தது. ஆனால், நிகழாண்டில் விளைச்சல் குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு அரபிக்கா பார்சிமெட் காபி ஒரு கிலோ ரூ.180 வரை விவசாயிகளிடம் வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். ஆனால், நிகழாண்டில், ரூ.110 முதல் 120 வரையே வியாபாரிகள் கொள்முதல் செய்வதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

காபி தோட்டங்களில், காபி தொழிலாளிகளுக்கு கடந்த ஆண்டு நாள் ஒன்றுக்கு குறைந்தபச்சமாக ரூ.153 கூலி வழங்கப்பட்டது. நிகழாண்டு, குறைந்த பச்ச கூலி ரூ.196 வரை வழங்கப்படுவதாக தோட்ட அதிபர்கள் தெரிவித்தனர்.

விளைச்சல், விலை குறைந்த நிலையில், கூலி நிகழாண்டு உயர்ந்ததால் விவசாயிகள் மிகவும் கவலையடைந்துள்ளனர்.

### தரமான விதைகளை வாங்க அறிவுறுத்தல்

தரச்சான்று இல்லாத பயிர் விதைகளை வாங்கி விவசாயிகள் ஏமாற வேண்டாம் என வேளாண் விதைச்சான்றுத்துறை எச்சரித்துள்ளது.

இதுகுறித்து தஞ்சை, புதுக்கோட்டை விதை ஆய்வு துணை இயக்குநர் ஆர்.எஸ். மனோகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயத்தில் முதன்மையான இடுபொருள் தரமான விதை மட்டும்தான். விதைத்த பின்பு தரமில்லாது போனால் விவசாயி மகசூலையும், வருமானத்தையும் இழக்க நேரிடும். எனவே தரமான விதைகள் விவசாயிகளுக்கு கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் மத்திய அரசால் விதைகள் சட்டம் - 1966, மற்றும் விதைகள் விதிகள் 1968, விதைகள் கட்டுப்பாட்டு ஆணை- 1983 ஆகிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டது.

இச்சட்டங்களின்படி ஒவ்வொரு மாநிலத்திலும் விதைச் சான்றளிப்பு மற்றும் விதை ஆய்வுப் பிரிவுகள், மாநில அரசு விதைச் சான்றளிப்புத் துறை அல்லது மாநில அரசு நிறுவனத்தின் கீழ் செயல்பட்டு விதைச் சான்றளிப்புத் துறை தரமான சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்வதிலும், அவ்வாறு உற்பத்தியான சான்று பெற்ற விதைகளையும், உண்மை நிலை விதைகளையும் ஆய்வு செய்து தரமான விதைகள் விவசாயிகளுக்குக்கு கிடைக்கச் செய்ய விதை ஆய்வுத் துறையும் செயலாற்றி வருகின்றன. இந்நிலையில், புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகள் தற்போது மக்காச்சோளம், கம்பு, உளுந்து, துவரை, நிலக்கடலை, எள், தர்பூசணி மறறும் அனைத்து வகை காய்கறிப் பயிர்களை சாகுபடி செய்ய ஆயத்தமாகும் தருணத்தில் விவசாயிகளும், விதை விற்பனையாளர்களும் பின்வரும் வழிமுறைகளை கவனத்தில் கொள்ள வேண்டும். விவசாயிகள் விதைகளை வாங்கும் போதும் விதை விற்பனை உரிமம் பெற்ற விற்பனையாளர்களிடம் மட்டுமே விதைகளை வாங்க வேண்டும். மேலும், விதைகளின் தரம் குறித்த சான்று அட்டை, பயிர், ரகம், குவியல் எண், காலாவதி நாள், உற்பத்தியாளர் முகவரி போன்றவற்றையும் கவனிக்க வேண்டும்.

விதை வாங்கும்போது கண்டிப்பாக விற்பனைப் பட்டியல் (பில்) போட்டு வாங்க வேண்டும். அவ்வாறு பெறப்படும் பில்லில் மேற்கூறிய விவரங்களைக் குறிப்பிட்டு வாங்குவோர், விற்பவர் கையெழுத்திட்டு பின்பு விதைக் கொள்கலன் அல்லது பையில் கூறப்பட்டுள்ள விவரங்களும் பில்லில் எழுதப்பட்டுள்ள விவரங்களும் சரியாக உள்ளனவான என்பதையும் சரிபார்த்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு விதையை வாங்கும் போதே அவற்றின் தரத்தில் கவனம் செலுத்தினால் தரமான விதைகளை பயிரிட்டு மகசூலைப் பெருக்கலாம்.

மேலும், விதையை நாங்களே தருகிறோம் அதிலிருந்து வரும் விளைபொருளையும் நாங்களே கொள்முதல் செய்து கொள்கிறோம் என்று கூறும் தானிய வியாபாரிகள் மற்றும் இடைத்தரகர்களை நம்பி ஏமாற வேண்டாம். அவ்வாறு விதை விநியோகம் செய்யும் நபர்களிடமும் விதை பற்றிய முழு விவரங்களுடன் விற்பனைப் பட்டியல் பெற்று, மேலும் விளைப்பொருள் கொள்முதல் செய்வதற்குரிய இருநபர் கையெழுத்திட்ட ஒப்பந்தமும் பெற்றுக் கொள்ள வேண்டும்.

தரமற்ற விதைகளை விற்பனை செய்வோர் மற்றும் உரிமம், பில் இல்லாமல் விதைகளை விற்பனை செய்பவர்கள் பற்றி

புதுக்கோட்டை விதை ஆய்வாளர்: 94856 20197, தஞ்சை, விதை ஆய்வு துணை இயக்குநர்  தொலைபேசி: 04362 - 267 959  தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம்.

**"கூடுதல் மகசூல் பெற சான்று செய்த விதைகள் பயன்படுத்த வேண்டும்'**

நிலக்கடலையில், கூடுதல் மகசூல் பெற சான்று செய்த விதைகளை பயன்படுத்த வேண்டும் என்றார் பெரம்பலூர் விதைச்சான்று உதவி இயக்குநர் முரளிதரன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் 120 ஏக்கர் பரப்பரளவில் நிலக்கடலை விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நிகழாண்டு பருவம் தவறி மழை பெய்த காரணத்தால், இதுவரை மூன்றில் ஒரு பங்காக 40 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே நிலக்கடலை விதைப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. கார்த்திகை

மற்றும் மார்கழி மாதங்களில் நிலக்கடலை விதைப் பண்ணை அமைப்பதற்கு உரிய தருணம் என்பதால், நிலக்கடலை விதைப் பண்ணைகள் அமைத்து பயன்பெறலாம். நிலக்கடலை ரகமான வி.ஆர்.ஐ- 2, வி.ஆர்.ஐ- 3, டி.எம்.வி- 7, டி.எம்.வி- 13, டி.ஏ.ஜி- 24 மற்றும் கோ (ஜி.என்)-4 போன்ற ரகங்களை தேர்வு செய்து, விதைப் பண்ணை அமைக்கலாம்.

இந்த ரகங்களில் வல்லுநர் விதைகள் மற்றும் ஆதாரநிலை விதைகளை, வேளாண்மை விரிவாக்க மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விதைப் பண்ணைகள் அமைத்தவுடன், விதை உற்பத்தியாளர்கள் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவுக் கட்டணமாக ரூ. 25-ம், வயலாய்வுக் கட்டணமாக ஏக்கருக்கு ரூ. 50-ம், பகுப்பாய்வுக் கட்டணமாக ரூ. 30-ம் செலுத்தி,

தங்களது விதைப் பண்ணைகளை பதிவு செய்யலாம்.

விதைப் பண்ணைகள் அமைப்பதால், விவசாயிகள் கொள்முதல் மற்றும் உற்பத்தி மானியங்களை அரசிடமிருந்து பெறுவது மட்டுமின்றி, சான்றுசெய்த விதைகளின் மூலம் 20 சதம் கூடுதல் மகசூல் பெறலாம் என்றார்.

**உயிரியல் கொல்லிகள் குறித்த இலவசப் பயிற்சி**

பெரம்பலூர் தந்தை ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், உயிரியல் கொல்லிகள் குறித்த இலவச பயிற்சி வகுப்பு டிச. 17-ம் தேதி நடைபெற உள்ளது என்றார் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர். பி. வெங்கடேசன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தற்போது சாகுபடி செய்யும் பயிர்களில் பூச்சிகள், நோய்கள், தாவர நூற்புழுக்கள் ஆகியவை அதிகமாக தாக்கி, பயிரின் வளர்ச்சி குன்றி மகசூல் இழப்பு ஏற்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்த, விவசாயிகள் ரசாயன பூச்சிக் கொல்லிகளை அதிகளவில் பயன்படுத்துகின்றனர். இதனால், புதிய வகை பூச்சிகளும், நோய்களும் தோன்றி, பயிருக்கு நன்மை தரக்கூடிய பூச்சிகளை அழிக்கின்றன.

இதன்மூலம், சுற்றுப்புற சூழல் பாதிக்கப்படுவதோடு உணவில் விஷத்தன்மை ஏற்பட்டு, தீமை செய்யும் பூச்சிகளுக்கு எதிர்ப்புத் திறன் உண்டாக்குகிறது. ரசாயன பூச்சிக்கொல்லிகள் நன்மை செய்வதை விட, அதிகளவு தீமை செய்கிறது. எனவே, உயிரியல் கொல்லிகளை பயன்படுத்தி, பயிர்களை தாக்கும் பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்தி பயிர் சாகுபடி செய்வது குறித்த தொழில் நுட்பங்கள் குறித்து, விவசாயிகளுக்கு காணொளி காட்சி மூலம் விளக்கம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இப்பயிற்சி வேளாண் அறிவியல் மையத்தில் டிச. 17-ம் தேதி காலை 10 மணி முதல் 3 மணி வரை நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ள ஆர்வமுள்ள விவசாயிகள், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தை 04328-293592, அல்லது பயிர் பாதுகாப்பு தொழில் நுட்ப வல்லுநரை 9787620754 என்ற தொலைபேசி எண்களில் காலை 9.30 முதல் மாலை 5 மணி வரை தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து பயன்பெறலாம்.

**"கூடுதல் மகசூல் பெற சான்று செய்த விதைகள் பயன்படுத்த வேண்டும்'**

நிலக்கடலையில், கூடுதல் மகசூல் பெற சான்று செய்த விதைகளை பயன்படுத்த வேண்டும் என்றார் பெரம்பலூர் விதைச்சான்று உதவி இயக்குநர் முரளிதரன்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில் ஆண்டுதோறும் 120 ஏக்கர் பரப்பரளவில் நிலக்கடலை விதைப் பண்ணைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. நிகழாண்டு பருவம் தவறி மழை பெய்த காரணத்தால், இதுவரை மூன்றில் ஒரு பங்காக 40 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே நிலக்கடலை விதைப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. கார்த்திகை மற்றும் மார்கழி மாதங்களில் நிலக்கடலை விதைப் பண்ணை அமைப்பதற்கு உரிய தருணம் என்பதால், நிலக்கடலை விதைப் பண்ணைகள் அமைத்து பயன்பெறலாம். நிலக்கடலை ரகமான வி.ஆர்.ஐ- 2, வி.ஆர்.ஐ- 3, டி.எம்.வி- 7, டி.எம்.வி- 13, டி.ஏ.ஜி- 24 மற்றும் கோ (ஜி.என்)-4 போன்ற ரகங்களை தேர்வு செய்து, விதைப் பண்ணை அமைக்கலாம்.

இந்த ரகங்களில் வல்லுநர் விதைகள் மற்றும் ஆதாரநிலை விதைகளை, வேளாண்மை விரிவாக்க மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

விதைப் பண்ணைகள் அமைத்தவுடன், விதை உற்பத்தியாளர்கள் பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள விதைச்சான்று உதவி இயக்குநர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவுக் கட்டணமாக ரூ. 25-ம், வயலாய்வுக் கட்டணமாக ஏக்கருக்கு ரூ. 50-ம், பகுப்பாய்வுக் கட்டணமாக ரூ. 30-ம் செலுத்தி,

தங்களது விதைப் பண்ணைகளை பதிவு செய்யலாம்.

விதைப் பண்ணைகள் அமைப்பதால், விவசாயிகள் கொள்முதல் மற்றும் உற்பத்தி மானியங்களை அரசிடமிருந்து பெறுவது மட்டுமின்றி, சான்றுசெய்த விதைகளின் மூலம் 20 சதம் கூடுதல் மகசூல் பெறலாம் என்றார்.

**கோமாரி நோய் தொடர் சிகிச்சை முகாம்: ஆட்சியர் ஆய்வு**

காரைக்கால், டிச. 12: காரைக்காலில் நடைபெறும் கோமாரி நோய் தொடர் சிகிச்சை முகாமை மாவட்ட ஆட்சியர் புதன்கிழமை ஆய்வு செய்து, கால்நடை மருத்துவர், கால்நடை வளர்ப்போரிடம் விவரங்களை கேட்டறிந்தார்.

காரைக்காலில் கோமாரி நோயை கட்டுப்படுத்தும் விதமாக, கால்நடைத் துறை சார்பில் திருநள்ளாறு பகுதி தென்னங்குடி கால்நடை மருத்துவமனை மூலம் கண்ணாப்பூர் கிராமத்தில் கோமாரி நோய் தொடர் சிகிச்சை முகாம் நடைபெற்று வருகிறது.

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அ. முத்தம்மா புதன்கிழமை முகாமுக்குச் சென்றார்.

கோமாரி நோய் தொடர்பாக அளிக்கப்படும் சிகிச்சை குறித்து கால்நடை மருத்துவர்களிடம் அவர் கேட்டறிந்தார். கால்நடை வளர்ப்போருக்கு, கோமாரி நோய் குறித்த விழிப்புணர்வு இருக்கிறதா? என விவரங்களை கேட்டறிந்தார்.

கால்நடைகளுக்கு தேவையான மருந்துகள் அனைத்து கால்நடை மருத்துவமனைகளிலும் கையிருப்பில் வைத்திருக்குமாறு அதிகாரிகளை அவர் கேட்டுக்கொண்டார்.

கோமாரி நோயால் கால்நடைகள் பாதிக்கப்படாமல் இருக்க கால்நடை வளர்ப்போருக்கு உரிய ஆலோசனைகளை தொடர்ந்து அளிக்க வேண்டுமென ஆட்சியர் கேட்டுக்கொண்டார்.

கால்நடை வளர்ப்போரிடம், கால்நடைக்கு ஏற்படும் கோமாரி நோயை முழுமையாக குணப்படுத்த முடியுமெனவும், இதுகுறித்து கால்நடைத் துறையினர் அறிவுறுத்தியுள்ள ஆலோசனைப்படி நடந்துகொள்ள வேணடுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

காரைக்கால் கால்நடைத்துறை இணை இயக்குநர் (பொ) லதா மங்கேஷ்கர் மற்றும் கால்நடை மருத்துவர்கள் ராஜகோபால், தனசேகரன் உள்ளிட்டோர் ஆட்சியருக்கு விளக்கம் அளித்தனர்.

**கடல் கொந்தளிப்பு : இலங்கையில் கரையேறிய 3 மீனவர்கள்**

வேதாரண்யம், டிச. 12: கடல் கொந்தளிப்பால் படகு திசைமாறியதில் கோடியக்கரையிலிருந்து கடலுக்குச் சென்ற தரங்கம்பாடி மீனவர்கள் 3 பேர் வியாழக்கிழமை பிற்பகல் இலங்கையில் கரை சேர்ந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

நாகை மாவட்டம், தரங்கம்பாடி பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் குட்டியாண்டியூர் கோவிந்தராஜ் (55), அவரது மகன் ஜெகதீசன் (20), சின்னங்குடி நா. கலிய

பெருமாள் (50).

வேதாரண்யத்தை அடுத்த கோடியக்கரையில் குடும்பத்தினருடன் தங்கி மீன்பிடித் தொழில் செய்யும் இவர்கள் மூவரும், புதன்கிழமை காலை கண்ணாடியிழைப் படகு ஒன்றில் கடலுக்குச் சென்றனர்.

வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக கடலில் ஏற்பட்ட சீற்றத்தால் மீனவர்கள் சென்ற படகு திசை மாறியதாகக் கூறப்படுகிறது.

காற்றின் திசையில் சென்ற படகு இலங்கை கடல் பகுதிக்குள் சென்றுள்ளது. இலங்கை யாழ்பாணம், அச்சுக்கோட்டை கடற்ரையில் மீனவர்கள் மூவரும்

வியாழக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கரை சேர்ந்தனர். இவர்களுக்கு அங்குள்ள மீனவர்கள் உதவியுள்ளனர். அங்கு சென்ற இலங்கை பாதுகாப்பு வட்டாரங்கள் மீனவர்களிடம் விசாரித்துள்ளனர்.

தொடர் நடவடிக்கை குறித்து உடனடியாகத் தகவல் இல்லை. இலங்கையில் கரை சேர்ந்த விவரத்தை அந்த மீனவர்கள் கோடியக்கரையில் உள்ள தங்களது உறவினர் சின்னங்குடியைச் சேர்ந்த மீனவர் மாசிலாமணிக்கு தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளனர்.

### குமரி மாவட்டத்தில் மழை நீடிப்பு

கன்னியாகுமரி மாவட்டத்தில் வியாழக்கிழமை பிற்பகல் முதல் மழை விட்டு விட்டு பெய்தது. இந்த மழை இரவு வரை நீடித்தது.

மாவட்டத்தில் கடந்த ஒரு வாரமாக வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. சில பகுதிகளில் லேசான மழை பெய்தது. எனினும் அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லை.

இந்நிலையில், வியாழக்கிழமை பிற்பகல் முதல் குளிர்காற்று வீசியது. மாலை 4 மணிக்கு மழை பெய்யத் தொடங்கியது. தொடர்ந்து இரவு வரை மழை நீடித்தது. மாவட்டத்தில் தொடர்ந்து குளிர்ந்த காற்று வீசி வருகிறது.

### தூத்துக்குடியில் மழை: துறைமுகத்தில் 1-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்

வங்கக் கடலில் உருவாகியுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தூத்துக்குடி மாவட்டத்தில் பெரும்பாலான இடங்களில் வியாழக்கிழமை மழை பெய்தது.

வங்கக் கடலில் உருவான மாதி புயல் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுநிலையாக மாறியதால் தூத்துக்குடி மாநகரப் பகுதியில் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் மழை பெய்யத் தொடங்கியது.

சிறிது நேரம் பலத்த மழையும், பின்னர் லேசான தூறல் என இரவு வரை மழை தொடர்ந்து பெய்தது. இதனால் சாலையோரங்களில் மழைநீர் தேங்கியது. நீண்ட இடைவேளைக்குப் பின் மழை பெய்ததால் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சூழல்

உருவானது.ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக தூத்துக்குடி வஉசி துறைமுகத்தில் 1-ம் எண் புயல் கூண்டு ஏற்றப்பட்டுள்ளது. தூத்துக்குடி கடல் பகுதியில் 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளதாக மீன்வளத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஸ்ரீவைகுண்டம்:÷ஸ்ரீவைகுண்டம் பகுதிகளில் வியாழக்கிழமை சுமார் 2 மணி நேரம் மிதமான மழை பெய்தது.

வியாழக்கிழமை பிற்பகல் 2 மணி முதல் மாலை 4 வரை ஸ்ரீவைகுண்டம், செய்துங்கநல்லூர், ஆழ்வார்திருநகரி, ஏரல், சாயர்புரம் மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் மிதமான மழை பெய்தது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயரும் என பொதுமக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர். ஆறுமுகனேரி:÷ஆறுமுகனேரி, ஆத்தூர், காயல்பட்டினம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளிலும் வியாழக்கிழமை மாலை பலத்த மழை பெய்தது.ஆறுமுகனேரி பொய்யாங்குளம் பகுதியில் பிசான பருவ சாகுபடி செய்ய தயங்கி வந்த விவசாயிகளுக்கு இந்த மழை நம்பிக்கை அளித்துள்ளது.

### நெல்லையில் மழை

திருநெல்வேலியின் பல்வேறு பகுதிகளிலும் வியாழக்கிழமை இரவு பலத்த மழை பெய்தது.வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்யாத நிலையில், திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக கடும் பனிப்பொழிவு காணப்பட்டது. இரவு 9 மணிக்கு மேல் காலை 7 மணி வரை பனிப்பொழிவு அதிகம் காணப்பட்டதால் வாகனஓட்டிகள் பெரும் சிரமத்துக்கு ஆளாகினர்.

இந்நிலையில், வியாழக்கிழமை காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. மாலை 3 மணி முதல் லேசான சாரல் மழை பெய்தது. அதன்பின்பு பனிப்பொழிவு தொடங்கியது. ஆனால், இரவு 10 மணிக்கு மேல் மழை கொட்ட தொடங்கியது. வண்ணார்பேட்டை, புதிய பஸ் நிலையம், மேலப்பாளையம், திருநெல்வேலி சந்திப்பு, திருநெல்வேலி நகரம் உள்ளிட்ட பகுதிகளில் மழை பெய்தது.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## குன்னூர் தேயிலை ஏலத்தில்ரூ.83 கோடி கூடுதல் வருமானம்



ஊட்டி :நடப்பாண்டின் முதல் 11 மாதங்களில், குன்னூர் தேயிலை ஏல மையத்தில் நடைபெற்ற வர்த்தகத்தில், கடந்தாண்டை விட, 83 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைத்துள்ளது.

நீலகிரியில் உள்ள தேயிலை தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் தேயிலை துாள், குன்னூர் தேயிலை வர்த்தக சங்க ஏல மையம் மூலம் வாரந்தோறும் விற்கப்படுகிறது.கடந்த ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலத்தில், 48 ஏலம் நடைபெற்றுள்ளது. மொத்தம் 5.51 கோடி கிலோ தேயிலை துாள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இது, இதற்கு முந்தைய ஆண்டின் இதே காலத்தில், 5.13 கோடி கிலோவாக இருந்தது.

மதிப்பீட்டு காலத்தில், விற்கப்பட்ட தேயிலை துாளின் சராசரி விலை கிலோவுக்கு, 90.64 ரூபாய் என்ற அளவில் உள்ளது. இது, கடந்தாண்டு, 81.20 ரூபாயாக

இருந்தது.இதையடுத்து, கணக்கீட்டு காலத்தில், குன்னூர் தேயிலை ஏல மையத்தில், மொத்தம் 499.43 கோடி ரூபாய்க்கு வர்த்தகம் நடைபெற்றுள்ளது. இது, கடந்தாண்டின் இதே காலத்தில், 416.56 கோடி ரூபாய் என்ற அளவில் இருந்தது. இதன்படி, 82.87 கோடி ரூபாய் கூடுதல் வருமானம் கிடைத்துள்ளது; இது, 19.89 சதவீத வளர்ச்சியாகும் என, குன்னூர் கோத்தாரி வேளாண்மை மேலாண்மை மையத்தில் நடந்த கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

## இயற்கை எரிவாயு விலை உயர்வால் உர நிறுவனங்களுக்கு ரூ.9,000 கோடி செல



ஐதராபாத்: வரும் 2014ம் ஆண்டு, ஏப்ரல் 1ம் தேதி முதல், இயற்கை எரிவாயு விலை, இரண்டு மடங்கு உயர்த்தப்பட உள்ளதால், உரத் தயாரிப்பு நிறுவனங்களுக்கு, கூடுதலாக, 9,000 கோடி ரூபாய் செலவாகும் என, மதிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது, ஒரு யூனிட் (ஒரு லட்சம் பிரிட்டிஷ் தெர்மல் யூனிட் – எம்.எம்.பீ.டி.யு.,) இயற்கை எரிவாயுவின் விலை, 4.20 டாலர் என்ற அளவில் உள்ளது.இது, வரும் 2014ம் ஆண்டு, ஏப்ரல் முதல், 8.42 டாலராகவும், 2015ம் ஆண்டில், 10 டாலராகவும் அதிகரிக்கப்பட உள்ளது.ஒரு யூனிட் இயற்கை எரிவாயுவின் விலையில், 1 டாலர் உயர்ந்தால் கூட, உர நிறுவனங்களுக்கு, ஒரு டன் யூரியா தயாரிக்க, கூடுதலாக 1,384 ரூபாய் செலவாகும் என, யஷ்வந்த் சின்கா

தலைமையிலான பார்லிமென்ட் நிலைக் குழு தெரிவித்துள்ளது.

உள்நாட்டில், எரிவாயுவை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்பு நிறுவனங்களின் ஒட்டு மொத்த உர உற்பத்தி, 180 லட்சம் டன் என்ற அளவில் உள்ளது.பத்து லட்சம் டன் யூரியா தயாரிப்பதற்கு, இந்திய உர நிறுவனங்களுக்கு, சராசரியாக, 24.893 எம்.எம்.பீ.டி.யு., இயற்கை எரிவாயு தேவைப்படும். இந்நிலையில், ஒரு எம்.எம்.பீ.டி.யு., இயற்கை எரிவாயுவின் விலை, 1 டாலர் உயர்த்தப்படும் போது, உர தயாரிப்பு நிறுவனங்களுக்கு ஆண்டுக்கு, 2,466 கோடி ரூபாய் செலாவகும் என, நிலைக்குழு, பார்லிமென்டில் சமர்ப்பித்த
அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பா நெற்பயிரை நாசம் செய்யும் எலிகளைப் பிடிக்கும் பணி தீவிரம்

கம்மாபுரம்:கம்மாபுரம் பகுதியில் சம்பா நெற்பயிரை கடித்து நாசம் செய்யும் எலிகளைப் பிடிக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

கம்மாபுரம் ஒன்றியத்தில் தேவங்குடி, காவனூர், க.தொழூர், மருங்கூர், சி.கீரனூர், தே.பவழங்குடி, சிறுவரப்பூர், தர்மநல்லூர், வி.சாத்தப்பாடி, ஊ.கொளப்பாக்ம், வி.குமாரமங்கலம், கோபாலபுரம் உட்பட 30க்கும் மேற்பட்ட கிராமங்களில் 17 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

நடவு செய்து ஒன்னரை மாதம் ஆன நிலையில், நெற்பயிரில் கதிர்விடத் துவங்கியுள்ளன.

இந்நிலையில், வயல்களில் எலிகள் அதிகரித்துள்ளதால், அவை நெற்பயிரைக் கடித்து நாசம் செய்கின்றன. இதனால் மகசூல் குறையுமென விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.இந்நிலையில் வயலில் கிட்டி, எலிப்பொரி வைத்தும், புகை மூட்டம் போட்டும் எலிகளைப் பிடிக்கும் பணியில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.சிதம்பரம் அடுத்த பின்னலூர், அம்பாள்புரம், தலைகுளம் பகுதியைச் சேர்ந்த எலி பிடிக்கும் தொழிலாளிகள், கம்மாபுரம் பகுதிக்கு வந்து

சம்பா சாகுபடி செய்துள்ள வயல்களில் தஞ்சாவூர் கிட்டி பயன்படுத்தி எலி பிடித்து வருகின்றனர். எலிக்கு 20 ரூபாய் வரை விவசாயிகளிடம் வாங்குகின்றனர்.
பின்னலூர் எலி பிடிக்கும் தொழிலாளி வேலு கூறுகையில், "கம்மாபுரம் பகுதியில் சம்பா நெற்பயிர்களை சேதப்படுத்தும் எலிகளைப் பிடிக்க, ஏக்கருக்கு 60 முதல் 90 கிட்டிகள் வரை வைக்கிறோம். பிடிக்கும் ஒவ்வொரு எலிக்கும் 20 ரூபாய் வரை கட்டணம் பெறுகிறோம். எலிகள் கிட்டியில் சிக்கவில்லையெனில் 200 ரூபாய் கூலி கொடுக்கின்றனர். ஒரு வயலில் 30 எலிகள் வரை சிக்கும்' என்றார்.
வி.குமாரமங்கலம் விவசாயி தங்கதுரை கூறுகையில், "எனது வயலில் சம்பா நெற்பயிர்களை கடித்து எலிகள் நாசம் செய்தன. சிதம்பரம் பகுதி எலி பிடிக்கும் தொழிலாளிகளை அழைத்து வந்து நேற்று முன்தினம் எலி பிடித்தேன். 26 எலிகள் பிடிபட்டன' என்றார்.

புதுச்சேரி, காரைக்காலில் 3ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு



புதுச்சேரி :புதுச்சேரி, காரைக்காலில் 3ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.வங்க கடலில் உருவான "மடி' புயல் வலுவிழந்து தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி தமிழகம் நோக்கி நகர்ந்து வருகிறது. இதனால் புதுச்சேரியில் கன மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.இந்நிலையில், நேற்று அதிகாலை முதல் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியில் இடைவிடாது மழை பெய்து வருகிறது. கடலின் சீற்றம்

அதிகமாக இருந்தது. மேலும், புதுச்சேரி துறைமுகத்தில் 3ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றபட்டுள்ளது.காரைக்கால்கடந்த ஒரு வாரமாக காரைக்காலில் கடல் சீற்றமாக காணப்பட்டு வருகிறது. இந்நிலையில் நேற்று கனமழையுடன் லேசான காற்றும் வீசியது. அதையொட்டி, காரைக்கால் மார்க் தனியார் கப்பல் துறைமுகத்தில், 3ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.
பள்ளிகளுக்கு விடுமுறைபுயல் எச்சரிக்கை காரணமாகவும், கனமழை தொடர்ந்து பெய்து வருவதாலும், புதுச்சேரியில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பள்ளி, கல்லூரிகளுக்கு இன்று(13ம் தேதி), முதல்வர் ரங்கசாமி விடுமுறை அறிவித்துள்ளார்.

ரூ.29 லட்சம் மதிப்பில் கொப்பரை தேங்காய் ஏலம்

பெருந்துறை: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 29 லட்சம் ரூபாய்க்கு, கொப்பரை தேங்காய்கள் ஏலம் போனது.பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை தேங்காய் ஏலம் நடந்து வருகிறது.
நேற்று நடந்த ஏலத்தில், விவசாயிகளிடம் இருந்து, 887 மூட்டைகளில், 41 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர்.இதில், முதல் தரம் கொப்பரை தேங்காய் குறைந்தபட்ச விலையாக கிலோ ஒன்று, 68 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக, 71.50 ரூபாய்க்கும் விற்பனையானது. 2ம் தரம் கொப்பரை தேங்காய் குறைந்தபட்ச விலையாக கிலோ ஒன்று, 30.80 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக, 65 ரூபாய்க்கும் ஏலம் போனது.மொத்தம், 29 லட்சம் ரூபாய்க்கும் தேங்காய்கள் ஏலம் மூலம் விற்பனையானது.

வேளாண் உற்பத்தி விற்பனை சங்கம் போனஸ் நிலுவை தொகை வழங்கல்

கோபிசெட்டிபாளையம்: "காலைக்கதிர்' செய்தி எதிரொலியாக, கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தை சேர்ந்த, 70 பேருக்கு நிலுவை போனஸ் வழங்கப்பட்டது.

கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தின் கட்டுப்பாட்டில், 25க்கும் மேற்பட்ட ரேஷன் கடைகள் உள்ளன. சங்கத்தின் சார்பில் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் வாழை, தேங்காய் போன்றவை ஏலம் விடப்படுகிறது.

கோபி வேளாண் உற்பத்தி சங்கம் சார்பில், விவசாயிகளிடம் இருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்து, மாநில அளவில் விதை நெல் அனு ப்பி வைக்கப்படுகிறது. தீபாவளி பண்டிகையை முன்னி ட்டு, சங்கத்தின் சார்பில் பணியாளர்களுக்கு, 20 சதவீத போ னஸ் அறிவிக்கப்பட்டது. தீபாவளி நேரத்தில், 10 சதவீத போனஸ் மட்டும் வழங்கப்பட்டது. 10 சதவீத போன ஸ் வழங்கப்படாமல் இருந்தன. இது குறித்து "காலைக்கதிர்' செய்தி வெளியிடப்பட்டது. செய்தி எதிரொலியாக, நேற்று சங்கத்தை சேர்ந்த, 70 பேருக்கு, இரண்டு லட்சத்து, 22 ஆயிரத்து, 900 ரூபாய் போனஸ் வழங்கப்பட்டது.

சங்க தலைவர் காளியப்பன், பணியாளர்களுக்கு போ னஸ் வழங்கி கூறியதாவது: கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தை சேர்ந்த பணியாளர்களுக்கு, தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, 20 சதவீத போனஸ் அறிவிக்கப்பட்டது. முதற்கட்டமாக, 10 சதவீத போனஸ் வழங்கப்பட்டது. இரண்டாம் கட்டமாக, 10 சதவீத போனஸ் வழங்குவதுக்கு, மேலிடத்துக்கு கோப்பு அனுப்பி வைக்கப்பட்டது. நிர்வாக காரணமாக, போனஸ் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டது. சங்கத்தில் போதி அளவு பணம் இருப்பு உள்ளது, என்றார்.

போனஸ் வழங்கும் நிகழ்ச்சியில், கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்க எம்.டி., விஜய்கணேஷ், செயலாளர் இந்திராணி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## "தானே'வில் பாதித்த விவசாயிகளுக்கு...164 டன்! 2ம் கட்டமாக உளுந்து விதை வழங்கல்

கடலூர்:"தானே' புயலால் பாதிக்கப்பட்ட 20 ஆயிரத்து 500 முந்திரி விவசாயிகளுக்கு ஊடுபயிர் செய்ய இரண்டாம் கட்டமாக 164 டன் உளுந்து விதைகள் வழங்கப்பட்டது.

தமிழகத்தில் கடந்த 2011ம் ஆண்டு டிசம்பர் 30ம் தேதி வீசிய "தானே' புயலில், விவசாயிகளுக்கு வாழ்வாதாரமாக விளங்கிய 63 ஆயிரத்து 500 ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த முந்திரி மரங்கள் முறிந்தும், வேருடனும் சாய்ந்தன.

அதனைத் தொடர்ந்து, தமிழக முதல்வர், புயலால் வாழ்வாதாரத்தை இழந்த முந்திரி விவசாயிகளுக்கு இழப்பீடாக எக்டேருக்கு 9,000 ரூபாய் வழங்கினார். மரங்களை வெட்டி அகற்ற எக்டேருக்கு 25 ஆயிரம் ரூபாயும், வீரிய ரக "வி.ஆர்.ஐ. -3' முந்திரி கன்றுகளும், கன்றுகள் வளர்ந்து பலன் தரும் வரை வருவாய் ஈட்ட ஊடுபயிர் செய்வதற்கு ஐந்தாண்டுகளுக்கு விதை மற்றும் இடுபொருட்கள் இலவசமாக வழங்கப்படும் என அறிவித்தார்.

அதன்படி, முந்திரி மரங்களை வெட்டி அகற்றியதைத் தொடர்ந்து, அரசு மானிய விலையில் ஆழ்குழாய் அமைத்து, வீரிய ரக முந்திரி கன்றுகள் வழங்கியதோடு, ஊடுபயிரிட உளுந்து விதை வழங்கப்பட்டது.

அதனையொட்டி இரண்டாம் ஆண்டாக ஊடுபயிர் செய்வதற்காக தோட்டக்கலைத் துறை சார்பில் 164 மெட்ரிக் டன் உளுந்து விதை கொள்முதல் செய்து அதனை தலா 8 கிலோ வீதம் 20 ஆயிரத்து 500 முந்திரி விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. கடலூர் ஒன்றியத்திற்கு 1,820, குறிஞ்சிப்பாடி 2,865, பண்ருட்டி 12 ஆயிரத்து 190, அண்ணாகிராமம் 150, பரங்கிப்பேட்டை 323, விருத்தாசலம் 1,102, கம்மாபுரம் 2,050 விவசாயிகளுக்கு வழங்கப் பட்டுள்ளது.

விவசாயிகளுக்கு கள பயிற்சி முகாம்

கந்தர்வக்கோட்டை: விவசாயிகளுக்கு நடந்த கள பயிற்சி முகாமில், 75க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை முருகையா திருமண மண்டபத்தில், சென்னை மா.சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், ஆர்.டி.எஸ்., தொண்டு நிறுவனம் சார்பில், விவசாயிகளுக்கு களப்பயிற்சி முகாம் நடந்தது. இதில் காலநிலை இடர் மேலாண்மை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. முன்னதாக முகாமை கந்தர்வக்கோட்டை பஞ்., தலைவர் கவிதா துவக்கி வைத்தார். ஆர்.டி.எஸ்., தொண்டு நிறுவன தலைவர் கார்த்திகேயன் வரவேற்றார். இதைத்தொடர்ந்து ஆராய்ச்சி நிறுவன திட்ட முதுவியல் விஞ்ஞானி அபிநயா பங்கேற்று, வேளாண்மைத்துறையில் காலநிலை இடர்பாடு எவ்வாறு ஏற்படுகிறது?, இதனால் ஏற்படும் பிரச்னைகள், உயிரினங்களுக்கு ஏற்படும் சுகாதார கேடுகள், எதிர்கொள்ளும் அணுகுமுறைகள் என்னென்ன? என்பது குறித்து, விளக்கம் அளித்து பேசினார்.

இதில் மேலாண்மை தலைமை பயிற்சியாளர் விஜிகுமார், கந்தர்வக்கோட்டை வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ரவிச்சந்திரன் மற்றும் ஆர்.டி.எஸ்., தொண்டு நிறுவன நிர்வாகிகள் சுரேஷ், ராதிகா, தேன்மொழி, கோமதி உள்பட பலர் பங்கேற்றனர். முகாமில் கந்தர்வக்கோட்டை, குன்னான்டார் கோவில், கறம்பக்குடி, ஆவுடையார்கோவில், புதுகை, இலுப்பூர் பகுதிகளில் இருந்து, 75 விவசாயிகள், சுய உதவிக்குழுவினர் பங்கேற்று பயன்பெற்றனர்.

நெல் விதை கிராம திட்ட விவசாயிகள் பயிற்சி

முக்கூடல்: பாப்பாக்குடி வட்டாரத்தில் விதைக்கிராம திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு தேவையான விதைகளை விவசாயிகளே உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு கற்றுக்கொடுக்க நெல் விதைக்கிராம திட்ட விவசாயிகள் பயிற்சி வடக்கு அரியநாயகிபுரத்தில் நடந்தது.

முதல் கட்ட பயிற்சியில் வடக்கு அரியநாயகிபுரம் பகுதியை சேர்ந்த 100 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். பயிற்சியில் முக்கூடல் வேளாண்மை உதவி இயக்குநர் செந்தில்குமார் வரவேற்றார். விதை கிராம திட்டத்தின் பயன்களை நெல்லை வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) பெருமாள் எடுத்துரைத்தார். வடக்கு அரியநாயகிபுரம் ஊராட்சி மன்ற தலைவர் முன்னிலையில் நடந்த பயிற்சியில் நெல்லை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சவுந்திரராஜன் தலைமை உரையாற்றி விதை உற்பத்தி தொழில்நுட்பத்தை விளக்கி கூறினார்.

விதைச்சான்று உதவி இயக்குநர் அசோக்குமார் விதைச்சான்று நடைமுறைகள் குறித்து விரிவாக பேசினார். முக்கூடல் வேளாண்மை அலுவலர் கண்ணன் வேளாண்மை துறை திட்டங்கள் , அரசு மானியங்கள் குறித்து விளக்கினார். துணை வேளாண்மை அலுவலர் ராஜகோபால் விதை நேர்த்தி செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர் ஜோதிமுத்து மற்றும் அட்மா திட்ட பணியாளர்கள் தங்கசரவணன், ஜோதிமுத்து, கவாஸ்கர், கணேசன் மற்றும் அட்மா திட்ட பணியாளர்கள் செய்திருந்தனர்.

500 மரக்கன்று நடும் திட்டம்

திருநெல்வேலி: நெல்லை மாவட்டத்தை பசுமை மாவட்டமாக மாற்றும் திட்டத்தின் கீழ் கொங்கந்தான் பாறை ஐ.ஆர்.டி.பாலிடெக்னிக் கல்லூரி நாட்டு நலப்பணி திட்ட மாணவர்கள், இளைஞர் செஞ்சிலுவை சங்க மாணவர்கள் மற்றும் நெல்லை வனச்சகரம் இணைந்து 500 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டன.ஐ.ஆர்.டி.பாலிடெக்னிக் கல்லூரி தனி அலுவலர்

சிவசங்கரலிங்கம், மரக்கன்று நடவு முகாமை துவக்கி வைத்தார். கல்லூரி முதல்வர் (பொ) மார்ஜரி தியோடர், நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் தங்கவேலு, இளைஞர் செஞ்சிலுவை சங்க திட்ட அலுவலர் ஜஸ்டின், கல்லூரி உதவிப் பொறியாளர் கருணாநிதி, கம்ப்யூட்டர் ஆசிரியர் ஷகீன், வனச்சரக காப்பாளர் பிச்சை உட்பட பலர் கலந்து கொண்டனர். 500 மரக்கன்றுகள் நடப்பட்டன.

விதை மூட்டைகளிலிருந்து விதை மாதிரி எடுப்பது எப்படி?

தூத்துக்குடி: விதை மாதிரி எடுப்பதின் குறிக்கோள் என்னவென்றால் விதை குவியலை முழுவதுமாக பிரதிபலிக்கின்ற வகையில் தேவையான அளவு விதை மாதிரி எடுப்பதாகும். விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பப்படும் விதை மாதிரி விதைக்குவியலை ஒப்பிடும் போது மிகக் குறைவானதே ஆகும். விதை பரிசோதனை நிலையத்தில் எவ்வளவு துல்லியமாக ஆய்வு செய்தாலும் முடிவுகள் விதை மாதிரியின் தரத்தையே கொடுக்கும். ஆகையால் விதை மாதிரி எடுக்கும் போது கேள்விக்குறிய விதைக் குவியலை முழுவதுமாக பிரதிபலிக்கின்ற வகையில் விதை மாதிரி எடுக்க வேண்டும். விதை மாதிரியை பயிற்சி பெற்ற வல்லுநர்கள் அல்லது அனுபவமுள்ளவர்கள் மட்டுமே எடுக்க வேண்டும். விதை மூட்டைகளை விதை மாதிரி எடுப்பவர்கள் எளிதில் சென்றடையும் இடத்தில் அவர்களுக்கு மாதிரி எடுக்க உகந்த உயரத்தில் அனைத்து மூட்டைகளையும் அடுக்கி வைக்க வேண்டும். விதைக் குவியலில் உள்ள அனைத்து மூட்டைகளும் ஒரே விதை தொகுதியா என்று உறுதி செய்த பின்னர் மாதிரி எடுக்க வேண்டும். விதைக் குவியல் சாக்கு அல்லது துணி பைகளில் ஒரே அளவு சிப்பமாக இருந்தால் 5 மூட்டைகள் வரை இருந்தால் அனைத்து மூட்டைகளிலிருந்தும் முதன்மை மாதிரி எடுக்க வேண்டும். எப்போதும் குறைந்தது 5 முதன்மை மாதிரி எடுக்க வேண்டும். 6 முதல் 30 மூட்டைகள் வரை இருந்தால் குறைந்தது 5 மூட்டைகள் அல்லது ஒவ்வொரு 3 மூட்டைகளிலிருந்து இதில் எது அதிகமோ அத்தனை முதன்மை மாதிரி எடுக்க வேண்டும். 31 முதல் 400 மூட்டைகள் வரை இருந்தால் குறைந்தது 10 மூட்டைகள் அல்லது ஒவ்வொரு 5

மூட்டைகளிலிருந்து இதில் எது அதிகமோ அத்தனை முதன்மை மாதிரி எடுக்க வேண்டும். 401 அல்லது அதற்கு மேற்பட்ட மூட்டைகள் இருந்தால் குறைந்தது 80 மூட்டைகள் அல்லது ஒவ்வொரு 7 மூட்டைகளிலிருந்து இதில் எது அதிகமோ அத்தனை முதன்மை மாதிரி எடுக்க வேண்டும். அனைத்து முதன்மை விதை மாதிரிகளையும் ஒன்று

சேர்த்து கூட்டு மாதிரியை உருவாக்க வேண்டும். கூட்டு மாதிரியிலிருந்து கால் பங்கீட்டு முறையில் விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்ப வேண்டிய தேவையான அளவு சமர்பிப்பு மாதிரி எடுத்து அனுப்ப வேண்டும். விதை முளைப்புத்திறன் பரிசோதனை செய்ய மாதிரியை துணிப் பையிலும் ஈரப்பதம் பரிசோதிக்க மாதிரியை 700 காஜ் பாலித்தீன் பையில் காற்று புகாத வண்ணம் எடுத்து தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள விதை பரிசோதனை நிலையத்தில் ஒரு மாதிரிக்கு ரூ.30 செலுத்தி விதைகளின் தரத்தினை பரிசோதனை செய்து கொள்ளலாம் என்ற தூத்துக்குடி விதை பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர்கள் ரெனால்டாரமணி மற்றும் நெடுஞ்செழியன் கேட்டுக் கொண்டுள்ளனர்.

வடகிழக்கு பருவமழையின் அடுத்த இன்னிங்ஸ்சாதகமாகுமா..பாதகமாகுமா விவசாயிகள் ஆவல்

தூத்துக்குடி மாவட்டத்தில் நேற்று வடகிழக்கு பருவமழை அடுத்த இன்னிங்கசை துவங்கியது. நேற்று மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் ஒரளவு நல்ல மழை பெய்துள்ளது.தூத்துக்குடி மாவட்டத்தின் விவசாயம் மற்றும் குடிநீருக்கான தேவையை பூர்த்தி செய்யும் வகையில், அதிக அளவு மழைப்பொழிவைத் தருகின்ற காலமாக வடகிழக்கு பருவமழைக் காலம் உள்ளது. தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பகலில் வெயிலின் தாக்கமும், இரவில் குளிர்காற்றின் தாக்கமும் அதிகமாக இருந்தது. இந்த நிலையில் தூத்துக்குடியில் நேற்று மதியம் திடீரென்று மேகமூட்டத்துடன் கூடிய சூறைக் காற்று வீசியது. அதைத் தொடர்ந்து,

சுமார் ஒரு மணிநேரத்துக்கும் மேலாக நல்ல மழைப்பெய்தது. இந்த திடீர் மழையால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது, குடைகள் இன்றி நிறையப் பேர் மழையில் நனைந்தபடி சென்றனர். தூத்துக்குடி தவிர மாவட்டத்தின் மற்ற பகுதிகளிலும் ஆங்காங்கே லேசான அளவு மழைப் பொழிந்துள்ளது.இது குறித்து சென்னை வானிலை மைய அதிகாரி கூறியதாவது: இதே தேதியில் கடந்த ஆண்டுகளை ஒப்பிடும்போது, இந்த ஆண்டு பெய்த வடகிழக்குப் பருவ மழையின் அளவு குறைவாகவே உள்ளது. தற்போது வலுவிழந்துள்ள மடிப்புயல், தீவிர குறைந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக மாறியுள்ளது. இதனால் பாண்டிச்சேரியிலும், தமிழகத்தின் கடலோர மாவட்டங்களிலும் இன்னும் 2 நாட்களில் அதிக அளவு மழையை எதிர்ப்பார்க்கலாம். வடகிழக்கு பருவமழை காலம் முடிவதற்கு இன்னும் 10 நாட்கள் இருப்பதால், இந்த ஆண்டும் தேவையான மழைப் பொழிவு கிடைக்கும் என்று நம்பப்படுகிறது. இவ்வாறு வானிலை மைய அதிகாரி கூறினார். இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழைக் காலத்தில், தூத்துக்குடி மாவட்டத்திற்கான நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் நல்ல மழைப் பெய்தது. இது, கடைமடை விவசாயிகளும்

கோடையை சமாளிப்பதற்கு உதவியாக இருந்தது. வடகிழக்கு பருவகாலத்தின் தொடக்கத்தில், பருவமழை நன்றாக இருந்தது. பின்னர் மழையின்றி, வெயிலும் பனியுமாக பருவநிலை மாறியது. இது மாவட்டத்தின் சில பகுதி விவசாயிகளிடையே மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியது. இந்த நிலையில் நேற்று பெய்த மழை, வடகிழக்கு பருவமழையின், அடுத்த இன்னிங்ஸ்க்கு துவக்கமாக இருக்குமா? என்பது தூத்துக்குடி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகளின் எதிர்ப்பார்ப்பாக உள்ளது. வடகிழக்குப் பருவமழையின் நிலை குறித்த விவசாயிகளின் எதிர்பார்ப்பு பகுதிக்கு பகுதி மாறுப்பட்டுள்ளது. அதாவது, குளத்துப்பாசனம் மூலம் விவசாயத்தில் ஈடுபடுபவர்களுக்கு பருவமழையின் அடுத்த துவக்கம் பாதகமாக அமைந்துவிட வாய்ப்புள்ளது. எப்படியெனில், அவர்கள் தற்போதுதான், நாற்றுநடவு செய்துள்ளனர். பருவமழை, தீவிரம்

அடையும் போது, நாற்றுகள் தண்ணீரில் மூழ்கும் அபாயம் இருக்கிறது. தற்போதும், சில பகுதிகளில் அதிக அளவு தண்ணீரால் பல்வேறு வாழைத்தோட்டங்கள் வெள்ளத்தில் மிதக்கின்றன என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். அதனால், இவர்கள் நேற்று பெய்த மழையை வடகிழக்கு பருவ மழையின் அடுத்த தொடக்கமாக இருக்குமோ என்று கவலையுடன் எதிர்நோக்கி இருக்கின்றனர். அதே வேளையில் ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து ஆற்றின் வழியாக கடலுக்கு திறந்துவிடும் தண்ணீரை, கொள்ளளவை விட குறைவாக உள்ள ஆத்தூர் குளத்திற்கு திறந்து விட வேண்டும் என அதிகாரிகளுக்கு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்திருப்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. மானாவாரி விவசாயத்தில் ஈடுபடுபவர்களுக்கு நேற்று பெய்த மழை, வடகிழக்கு பருவமழையின் அடுத்த துவக்கம், என்று அவர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தி உள்ளது. விவசாயிகளின் இந்த மாறுபட்ட எதிர்பார்ப்பு குறித்து அனுபவம் வாய்ந்த விவசாயி ஒருவர் கூறும்போது, வானத்துக்கு கீழே விவசாயம் செய்துவிட்டு, "மழை பெய்கிறதே, வெயில் அடிக்கிறதே' என்று கவலைப்பட்டால் மட்டும் எந்த ஒரு செயலும் நடக்காது. நிலைமைக்கு தகுந்தவாறு செயல்பட்டு மகசூலை வீடு கொண்டு சேர்ப்பதில்தான் விவசாயிகளின் உண்மையான உழைப்பு இருக்கிறது. என்று கூறினார். அந்த விவசாயின் கூற்றுப்படி வடகிழக்கு பருவமழையின் அடுத்த இன்னிங்ஸ் எப்படி இருக்கும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

உடன்குடியில் நிலத்தடிநீர் மேலாண்மை திட்ட பயிற்சி முகாம்

உடன்குடி :உடன்குடியில் நிலத்தடி நீர் தாங்கிகளின் மேலாண்மை திட்ட பயிற்சி முகாம் துவங்கியது. இதில் உடன்குடி பகுதியில் உள்ள ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.மத்திய நிலத்தடி நீர் வாரியம் இந்திய அரசின் கீழ் இயங்கும் நீர்வள அமைச்சகத்தின் ஒரு தேசிய அளவிலான நிறுவனம். இதனுடைய முக்கிய குறிக்கோள் நீர்வளத்தின் முக்கியத்துவம் பல வகையான நீர் சம்பந்தமான பிரச்சனைகளை எப்படி நிர்வகிப்பது. நாடு முழுவதும் நீரை சேமிப்பது மற்றும்

பாதுகாப்பது, நீர்வளத்தை கணக்கிடுதல் மற்றும் ஒழுங்குபடுத்துதல், நிலத்தடி நீர் ஆண்டுதோறும் உருபெரும் முக்கிய நீர் ஆதாரம். நீண்ட கால நீர் சேமிப்பு கணக்கீடுகள் நிலத்தடி நீர் பயன்பாட்டு திட்டங்களுக்கு தேவையாகிறது. இதன் தொடர்பாக நீண்ட கால நீர்மட்ட அளவுகள் மற்றும் மழை அளவுகள் நீர் செறிவூட்டுவதற்கான காரணிகள் முக்கியத்துவம் பெறுகிறது. நிலத்தடி நீர், முக்கிய படிவு பாறைகள், வண்டல்கள் என்று அழைக்கப்படும். மணல் மற்றும் கூழாங்கற்கள் இருக்கும் நுண் துளைகளில் கடின பாறைகளில் சிதைவுற்ற மற்றும் பிளவுபட்ட பகுதிகள் கிடைக்கிறது. இதுவே ஒட்டுமொத்தமாக நீர்தாங்கிகள் என்று அழைக்கப்படுகிறது. தற்போது மத்திய நிலத்தடி நீர்வாரியம் நீர்தாங்கிகளை வரையருக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இந்த பணியின் ஒரு பகுதியாக நீர் மேலாண்மை குறித்து பயிற்சி உடன்குடி டவுன் பஞ்.,மண்டபத்தில் வைத்து இரண்டு நாட்கள் நடந்தது. முதல் நாள் பயிற்சி துவக்க விழா காலை 11 மணிக்கு நடந்தது. தூத்துக்குடி மாவட்ட திட்ட இயக்குனர் பெல்லா தலைமை வகித்து நிலத்தடி நீரின் அவசியம் மற்றும் அதனை சேமிப்பது குறித்து பேசினார். வேளாண்மை இணை இயக்குனர் தக்ஷிணாமூர்த்தி முன்னிலை வகித்து நிலத்தடி நீர் ஆதாரம் இருந்தால் தான் வேளாண்மை செழிக்கும் நிலத்தடி நீர் ஆதாரத்தை பெருக்கும் வகைகளை விளக்கினார். சென்னை தென்கிழக்கு கடலோர மண்டலம் மத்திய நிலத்தடி நீர் வாரிய மண்டல இயக்குனர் சம்பத்குமார் வரவேற்றார். உடன்குடி பகுதியில் நிலத்தடிநீர் ஆதாரம் குறைந்து வருவதால் நீர் ஆதாரத்தை பெருக்குவது குறித்து விளக்க படங்கள் திரையிடப்பட்டது. மேலும் பண்ணை குட்டைகள், கசிவு குட்டைகள், நீர் பிடிப்பு குளங்கள், தடுப்பணைகள் கட்டுவது குறித்தும் விளக்கமளித்தனர். இதில் விவசாயிகளுக்கு ஏற்படும் சந்தேகங்களை திருச்செந்தூர் வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ராஜேந்திரன், சென்னை மத்திய நிலத்தடி நீர் வாரிய விஞ்ஞானிகள் பிரமநாயகம், பன்னீர், கோபிநாத் ஆகியோர் விளக்கி பேசினர்.இதில் உடன்குடி பஞ்.,யூனியன்

சேர்மன் மல்லிகா, துணைத்தலைவர் ராஜதுரை, உடன்குடி பஞ்.,யூனியன் ஆணையாளர் தமிழ்செல்வி, கூடுதல் பிடிஓ.,உலகநாதன், யூனியன் கவுன்சிலர்கள் ரதிஈஸ்வரி, பிரபாகர் முருகராஜ், பிரதீபன், குலசேகரன்பட்டணம் பஞ்.,தலைவர் பெருமாள், மாதவன்குறிச்சி தலைவர் பாண்ட்ஸ், குதிரைமொழி தலைவர் கன்னிமுத்து, செம்மறிகுளம் தலைவர் ஜெயபால், நயினார்பத்து தலைவர் கணேசன், சிறுநாடார்குடியிருப்பு தலைவர் கமலம், உடன்குடி டவுன் பஞ்.,கவுன்சிலர்கள் திலகவதி, , பொதுமக்கள் கலந்து கொண்டனர். இறுதியில் சென்னை மத்திய நிலத்தடி நீர் வாரியம் விஞ்ஞானி சுப்புராஜ் நன்றி கூறினார். இரண்டாவது நாளாக நேற்று பயிற்சி முகாம் நடந்தது.

கழுகுமலையில் கடும் பனிப்பொழிவுகவலையில் விவசாயிகள் உறைந்தனர்
கழுகுமலை: கழுகுமலையில் @நற்று அதிகமான பனிமூட்டம் காணப்பட்டது. இதனால் வாகனங்கள் ஹெட்லைட்டை எரியவிட்டபடி சென்றன.
கழுகுமலை பகுதியில் மழையின் அளவு வெகுவாக குறைந்து@பான நிலையில் தற்@பாது கார்த்திகை மாதத்தி@ல@ய பனியின் தாக்கம் கடுமையாக அதிகரித்துள்ளது. கடந்த சில நாட்களாக@வ கழுகுமலையில் இரவில் சராசரியாக பனிப்பெய்தும், அதிகாலையில் சூரியன் வருதற்கு முன்புவரை அதிகமாகவும் இருந்து வந்தது. இதனால் குறிப்பிட்ட பருவத்தில் மழை பெய்திருக்க @வண்டிய கழுகுமலையில் பருவமழையை நம்பி விவசாயிகள் மானாவாரி பயிர்களை பயிர் செய்தனர். ஆனால் @பாதியளவிற்கு மழை பெய்ய வில்லை என்பதாலும், @தவையற்ற @நரத்தில் மழை பெய்ததாலும் மிகவும் கவலையில் இருந்தனர். இந்நிலையில் தற்@பாது அதிகாலை @நரத்தில் கடுமையான பனிப்பொழிவு காணப்படுகிறது. எதி@ர இருக்கும் நபரை அடையாளம் காணமுடியாத அளவிற்கு பனிப்பொழிவு இருந்தது. கழுகுமலை டூ @க ாவில்பட்டி மெயின் @ராட்டில் எந்தப்பக்கம் எந்த வாகனம் வருகிறது என்ப@த தெரியாத அளவிற்கு பனியின் தாக்கம் அதிகமாக இருந்தது. வாகனங்கள் அனைத்தும் விடிந்த பின்னரும் ஹெட்லைட்டை எரியவிட்டபடி சென்றன. சுமார் 9.30 மணிவரை வெயில்

அடித்தாலும் முழுமையாக பனி விலகாமல் அப்படி@ய இருந்தது என்கின்றனர். அடுத்தடுத்த நாட்களில் பனிப்பொழிவு அதிகரிக்குமா என்ற கவலையில் விவசாயிகள் உறைந்து @பாயுள்ளனர். ஏனெனில் பனிப்பொழிவு அதிகரித்தால் ஏற்கன@வ ஊட்டமில்லாமல் இருக்கும் பயிர்கள் முற்றிலும் கருகிப்@பாக வாய்ப்புள்ளதாக கூறுகின்றனர்.

விதைச்சான்று அலுவலர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி

திருச்செந்தூர் : திருச்செந்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் விதைச்சான்று அலுவலர்களுக்கான புத்தூட்டப் பயிற்சி நடந்தது. தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், ராமநாதபுரம், கன்னியாகுமரி, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விதைச்சான்று அலுவலர்கள் மற்றும் விதைச்சான்று உதவி இயக்குநர்கள் இந்த பயிற்சியில் கலந்து கொண்டனர். பயிற்சியில் தூத்துக்குடி விதைச்சான்று உதவி இயக்குநர் பாரதி வரவேற்றார். விருதுநகர் விதை ஆய்வு துணை இயக்குநர் நாராயணபிரசாத் பயிற்சியினை துவக்கி வைத்து பயிற்சியின் நோக்கம் பற்றியும், விதைச்சட்டம் மற்றும் விதிகள் பற்றியும் பேசினார். கன்னியாகுமரி விதைச்சான்று உதவி இயக்குநர் சந்திரசேகரன் நாயர் பயிற்சிக்கான பாடத் திட்டங்களை ஒதுக்கீடு செய்து பயிற்சியினை நடத்தினார். கிள்ளிகுளம் வேளாண் கல்லூரி பேராசிரியர் முருகேசன் விதைப் பயிர்களில் தோன்றும் பூச்சிகள் மற்றும் அவற்றைக் கட்டுப் படுத்தும் முறைகள் பற்றி செயல் விளக்கம் செய்து காண்பித்தார்.

விதைப்பண்ணைப் பதிவு செய்தல், கலவன்களைக் கண்டறிதல், வயலாய்வு செய்தல், விதைப்பண்ணைத் தள்ளுபடி செய்தல், விதைச் சுத்தி அறிக்கைப் பெறுதல், விதைச் சுத்தி செய்தல், சான்றட்டைக் கட்டுதல், சிறப்பு அனுமதி வழங்குதல் போன்ற தலைப்புகளில் பாடத்திட்டங்கள் நடத்தப்பட்டது.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை விதைச்சான்று அலுவலர்கள் ஊமைத்துரை, சிவகுமார், கல்பனாதேவி, விக்னேஸ்வரி, வேளாண் அலுவலர் விதைப் பரிசோதனை நிலையம் ரெனால்டாரமணி, நெடுஞ்
செழியன், வேளாண்மை அலுவலர் மகாதேவன், விதை ஆய்வாளர் வெங்கட சுப்பிரமணியம் மற்றும் திருச்செந்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் பிரமநாயகம் ஆகியோர் செய்திருந்தனர்.

பனிமழை பெய்தது, பருவமழை பொய்த்தது

ஆத்தூர் :ஆத்தூர்-ஆறுமுகநேரி சுற்றுப்பகுதியில் விடிய விடிய பனிமழை பெய்து வருகிறது.ஆத்தூர்-ஆறுமுகநேரி பகுதியில் மழை சீசன் துவங்கிய பின்னரும் விவசாயத்திற்கு போதுமான அளவு மழை பெய்யவில்லை. இதனால் விவசாயிகளும், பொதுமக்களும் பெரும் ஏமாற்ற மடைந்துள்ளனர். இதற்கிடையில் மழை சீசன் துவங்கும் முன்பிருந்தே பனி பெய்து வந்தது. பனிப்பொழிவு அதிகமாக இருப்பதாலேயே ஆத்தூர் பகுதியில் போதிய மழை பெய்யவில்லை என பொதுமக்கள் ஆதங்கப்பட்டு வந்த நிலையில் இப்பகுதியில் பனி தொடர்ந்து பெய்து வருகிறது.ஆத்தூர்-ஆறுமுகநேரி பகுதியில் எதிர்பார்த்த அளவு மழை பெய்யாமல் பொய்த்து ஏமாற்றிய நிலையில், தற்போது மாலையில் 6 மணிக்கு முன்னரே துவங்கும் பனிப்பொழிவு காலையில் 8 மணி தாண்டிய பின்னரும் விடாமல் தொடர்ந்து வருகிறது. இதனால் பொதுமக்கள் இரவு துவங்கி விடிந்த பின்னரும் குளிரில் நடுங்கி வருகின்றனர்.
ஆத்தூர் பகுதியில் விடியற்காலை வரை பனி புகை மண்டலமாக அடர்த்தியாக பெய்வதால், எதிர் எதிரே வரும் வாகனங்கள் பெரும் சிரமப்பட்டு ஒன்றை ஒன்றை கடந்து செல்கின்றன. ஆத்தூர்-ஆறுமுகநேரி சுற்றுப்பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் பனிப்பொழிவால் பொதுமக்களும், வாகனஓட்டிகளும் மாதக்கணக்கில் அவதியுற்று வருகின்றனர்.

மாவட்டத்தில் நிலத்தடி நீருக்கு...ஆபத்து! மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு இல்லை என புகார்

காஞ்சிபுரம்,:'காஞ்சிபுரம் மாவட்டத்தில் நிலத்தடிநீர் அளவுக்கதிகமாக உறிஞ்சப்பட்டு வருவதால், நிலத்தடி நீர்மட்டம் அதல பாதாளத்திற்கு சென்றுள்ளது' என, மத்திய நிலத்தடி நீர்வாரியம்
தெரிவித்து உள்ளது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் கடந்த 2009 முதல் தற்போது வரையிலான நிலத்தடி நீர்மட்டம் குறித்து, மத்திய நிலத்தடி நீர் வாரியம் மற்றும் மாநில பொதுப்பணி துறை ஒரு ஆய்வு நடத்தி உள்ளது.

லத்துார் கவலைக்கிடம்

அதன் ஒரு பகுதியாக காஞ்சிபுரம் மாவட்டத்தின் 13 ஒன்றியங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு குறித்து ெவளியாகி உள்ள அறிக்கையில், லத்துார் ஒன்றியத்தில் நிலத்தடி நீர்மட்டம் மிகவும் அபாயகரமாக குறைந்து உள்ளதாகவும், மற்ற ஒன்றியங்களின் நிலையும் கவலைக்கிடமாக உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

இது குறித்து, மத்திய நிலத்தடிநீர் வாரியத்தின், மண்டல இயக்குனர், சம்பத்குமார் கூறுகையில், "கிராமங்கள் நிறைந்த லத்துாரில், மழைநீர் சேகரிப்பு குறித்து, முறையான விழிப்புணர்வு
ஏற்படுத்தாதவில்லை. நிலத்தடி நீர் ஆதாரங்கள் முறையாக பராமரிக்கப் படவில்லை," என்றார்.

மேலும், "நிலத்தடி நீர்மட்டம் அபாய கட்டத்தை எட்டியுள்ளது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும், இதே நிலைதான் உள்ளது. எனவே, மாவட்ட நிர்வாகம் விவசாயிகளிடையே, மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவத்தை விளக்க, தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்," என்றார்.

அடுத்து வாலாஜாபாத்

லத்துாரில் நிலத்தடி நீர்மட்டம் மிக மிக மோசமாக உள்ள நிலையில், வாலாஜாபாத், உத்திரமேரூர் மற்றும் திருக்கழுக்குன்றத்தில், கிடைக்கும் மழைநீர் ஆதாரத்தை விட, கூடுதலாக நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது.

அதே நேரத்தில், காஞ்சிபுரம், சித்தாமூர், காட்டாங்கொளத்துார், அச்சிறுப்பாக்கம் ஆகிய, 4 ஒன்றியங்களில் பெய்யும், 100 சதவீத மழைநீரில், 70 சதவீதம் சேமிக்கப்படுவதாக ஆய்வில் தெரியவந்து உள்ளது. இது போதாது எனினும், மற்ற ஒன்றியங்களைவிட சற்று பரவாயில்லை.

**'வானம் பார்த்த பூமி'**

லத்துார் விவசாயிகளிடம் நிலத்தடி நீர்மட்டம் குறித்து கேட்டபோது, 'லத்துாரில் உள்ள, 50 ஏரிகளும், கடந்த, 30 ஆண்டுகளுக்கும் மேலாக, முறையாக துார்வாரப்படாமல் உள்ளன. இதனால், மழைக்காலங்களில் பெய்யும் குறைந்த அளவு மழைநீரைக் கூட சேமிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், வானம் பார்த்த பூமியாக விளங்கும் இங்கு, கிணறு, ஆழ்துளை கிணறு மூலம், விவசாயம் செய்து வருவதால், இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம், வெகுவாக குறைந்துள்ளது' என்றனர்.

புதிய தொழில் நுட்பத்தில் விவசாயிகள் ஆர்வம்

கச்சிராயபாளையம்:கச்சிராயபாளையம் பகுதியில் புதிய தொழில் நுட்பமுறையில் கரும்பு விவசாயம் மேற்கொள்வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டிவருகின்றனர். கச்சிராயபாளையம் பகுதிகளில் அதிகளவில் கரும்பு பயிரிடப்படுகிறது.இப்பகுதியில் ஆண்டு தோறும் 5 லட்சம் டன்னுக்கு மேல் கரும்பு உற்பத்தியாகிறது. கரும்பு சாகுபடிசெய்வதில் விவசாயிகள் பல புதிய தொழில்

நுட்ப முறைகளை மேற்கொள்கின்றனர். கரும்பு வெட்டிய பிறகு தோகையை தீயிட்டு கொளுத்தினர். தற்போது விவசாயிகள் கரும்பு தோகையை உரமாக மாற்றும் யுக்தியில் ஈடுபடுகின்றனர்.டிராஸ்கட்டர்

டிராஸ்கட்டர் என்ற கருவியின் மூலம் தோகையை சிறு துண்டுகளாக வெட்டுகின்றனர்.இதனால் விவசாய கழிவுகள் எளிதில் மக்கிவிடுவதுடன், களை வெகுவாக கட்டுப்படுத்தப்படுகிறது. களைக் கொள்ளி பயன்படுத்தும் அவசியம் ஏற்படுவதில்லை. கரும்பு தோகையில் யூரியா சத்து இருப்பதால் கட்டைக்கால் பயிருக்கு தேவையான யூரியா சத்தும் கிடைக்கிறது.

இதனால் ஒரு ஏக்கருக்கு 8 மூட்டை யூரியா தேவை குறைகிறது. தோகையை கொளுத்தும் போது சுற்றுச் சூழல் பாதித்து மண்ணின் வளம் குறைகிறது. புதிய தொழில் நுட்ப முறையில் இத்தகைய பாதிப்புகள் ஏற்படுவதில்லை. இந்த முறையின் மூலம் ஏக்கருக்கு ரூ 5 ஆயிரம் செலவு குறைவதாக விவசாயிகள் கூறுகின்றனர். இதனால் இப்பகுதி விவசாயிகள் டிராஸ்கட்டர் மூலம் தோகையை வெட்டும் புதிய தொழில் நுட்பத்தில் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

குண்டுமல்லி பூ விலை அதிகரிப்பு ரூ.1,200 : கடும் பனிபொழிவால் விலை கிடுகிடு

மேட்டூர்: கடந்த சிலநாட்களாக, சேலம் மாவட்டம் முழுவதும், கடும்பனிப்பொழிவு நீடிப்பதால், நடப்பாண்டு குளிர்காலத்தில் குண்டுமல்லி விலை, ஒரு கிலோ, 1,200 ரூபாயாக அதிகரித்துள்ளது, வியாபாரிகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை தீவிரம் குறைந்து, பனிப்பொழிவு அதிகரித்துள்ளது. சேலம் மாவட்டத்தில், சில நாட்களாக கடும் பனி பொழிவு நீடிக்கிறது. சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி, ஆத்தூர், கள்ளக்குறிச்சி, ஓமலூர் சுற்றுப்பகுதியில் இருந்து, சேலம் பூ மார்க்கெட்டுக்கு பூக்கள் விற்பனைக்கு வருகிறது. மேட்டூர், கொளத்தூர், மேச்சேரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த பூவியாபாரிகள், சேலம் மார்க்கெட்டில் பூக்கள் வாங்கி சென்று, கட்டி விற்பனை செய்கின்றனர். சில நாட்களாக சேலம் மாவட்டத்தில் பரவலாக நீடிக்கும்

பனிப்பொழிவு காரணமாக பெண்கள் விரும்பி சூடும் குண்டுமல்லி பூ உற்பத்தி குறைந்து விட்டது.

இரு நாட்களாக சேலம் பூ மார்க்கெட்டுக்கு மல்லிகை மட்டுமின்றி, இதர பூக்கள் வரத்தும் குறைந்துள்ளது. இதனால், மார்க்கெட்டில் பூக்கள் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது. நேற்று முன்தினம் குண்டு மல்லி ஒரு கிலோ, 1,200 ரூபாயாக அதிகரித்தது.

வழக்கமாக முகூர்த்த மாதங்களில் பூக்கள் விலை அதிகரிக்கும் நிலையில், கார்த்திகை மாதம் பூக்கள் விலை சீராகவே இருக்கும். ஆனால், நடப்பாண்டு சற்று முன்னதாக கார்த்திகை மாதமே பனிப்பொழிவு அதிகரித்ததாலும், முகூர்த்த நாள் என்பதாலும், இரு நாட்களில் பூக்கள் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது, வியாபாரிகளை விரக்தியில் ஆழ்த்தியுள்ளது.

கொளத்தூர் பூக்கடை உரிமையாளர் சேகர் கூறியதாவது:

ஆண்டுதோறும் தை, மாசி மாதங்களில் பூக்கள் விலை அதிகரிக்கும். மார்கழி மாதம் பூக்கள் உற்பத்தி குறைந்த போதிலும், விலை சீராகவே இருக்கும். ஆனால், நடப்பாண்டு கார்த்திகை மாதமே கடும் பனி நீடிப்பதால், பூக்கள் உற்பத்தி குறைந்து, விலை அதிகரித்துள்ளது. இரு நாட்களாக ஒரு கிலோ குண்டு மல்லி, 1,000 ரூபாய் முதல், 1,200 ரூபாய்க்கு விற்பனையாகிறது.

கனகாம்பரம் ஒரு கிலோ, 800 ரூபாய், காக்கட்டான் ஒரு கிலோ, 280 ரூபாய், சன்னமல்லி, 800 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஒரு கிலோ குண்டுமல்லி, 1,000 ரூபாய்க்கும், அதற்கு மேலும் வாங்கி விற்பனை செய்தால், நஷ்டம் ஏற்படும் என்பதால், இரு நாட்களாக பெரும்பாலான பூவியாபாரிகள், குண்டு மல்லிகை பூக்களை வாங்கி கடையில் விற்பனை செய்யவில்லை.

இவ்வாறு அவர் கூறினார்.குண்டுமல்லி பூக்கள் விலை உயர்வு காரணமாக, சேலம் மாவட்டத்தில் பெரும்பாலான பூக்கடைகளில், இரு நாட்களாக குண்டுமல்லி விற்பனை செய்யாதது பெண்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தியுள்ளது.

"பார்ம்ரோஸ்' எண்ணெய் விலை சரிவு; விவசாயி பெரும் கவலை

தர்மபுரி: "பார்ம் ரோஸ்' எண்ணெய் விலை சரிந்து வருவதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தர்மபுரி மாவட்டம், விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். மாவட்டத்தில், சில ஆண்டுகளாக பருவமழை குறைந்து வருவதால், விவசாயிகள், பாசன வசதியில் சாகுபடி செய்யும் பயிர்களை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டவில்லை.

மேலும், பாராமரிப்பு இன்றி, மானாவாரியாக சாகுபடி செய்யப்படும், ஃபார்ம்ரோஸ் செடிகளை சாகுபடி செய்வதில், சில ஆண்டுகளாக ஆர்வம் காட்டி வந்தனர். தர்மபுரியில் உற்பத்தி செய்யப்படும் ஃபார்ம் ரோஸ் எண்ணெய்க்கு, வியாபாரிகள் மத்தியில், நல்ல வரவேற்பு மற்றும் விலை கிடைத்து வந்தது. இதையடுத்து, தர்மபுரி மாவட்டதின் பல்வேறு பகுதிகளில், விவசாயிகள் ஃபார்ம் ரோஸ் சாகுபடி செய்வதில், அதிகம் ஆர்வம் காட்டி வந்தனர். மாவட்டத்தில், தற்போது, ஆயிரம் ஏக்கருக்கு மேல், "ஃபார்ம் ரோஸ்' சாகுபடி செய்யப்படுகிறது. இந்நிலையில், சில மாதங்களாக, வியாபாரிகள், "ஃபார்ம் ரோஸ்' எண்ணெய்யின் விலையை குறைத்துள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். மேலும், வாசனை திரவியம், குளியல் சோப்பு உள்ளிட்டவைகள் தயாரிப்பதில், முக்கிய பங்கு வகிக்கும் ஃபார்ம் ரோஸ் எண்ணெய்க்கு உரிய விலை கிடைக்க, மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர். இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறியது:தர்மபுரி மாவட்டத்தில், ஃபார்ம்ரோஸ் எண்ணெய் தயாரிக்கும் சிறு ஆலைகள், 60 உள்ளன. இங்கு, விவசாயிகள் கொண்டு வரும் ஃபார்ம்ரோஸ் புற்களில் இருந்து, ஃபார்ம் ரோஸ் எண்ணெய் தயாரிக்கப்பட்டு, விவசாயிகள் பெற்றுச் செல்கின்றனர்.சென்னை, கோவை, கேரளா ஆகிய பகுதிகளில் இருந்து வியாபாரிகள் நேரடியாக வந்து, ஃபார்ம்ரோஸ் எண்ணெயை வாங்கிச் செல்கின்றனர். இரண்டு ஆண்டுகளுக்கு முன், ஒரு கிலோ

ஃபார்ம் ரோஸ் எண்ணெய், 3,200 ரூபாய் வரை வாங்கிச் சென்றனர். தற்போது, ஒரு கிலோ எண்ணெய், 1,300 முதல், 1,600 ரூபாய் வரை மட்டும் வாங்கி செல்கின்றனர். வாசனை திரவியங்கள் மற்றும் குளியல் சோப்பு உட்பட பல்வேறு பொருட்கள் தயாரிக்க முக்கிய பங்கு வகிக்கும், ஃபார்ம் ரோஸ் எண்ணெயின் விலையை, வியாரிகள் குறைத்துள்ளதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.விவசாயிகள் நலன் கருதி, மாவட்ட நிர்வாகம், ஃபார்ம் ரோஸ் எண்ணெய்க்கு உரிய விலை கிடைக்க, மாவட்ட நிர்வாகத்தின் கண்காணிப்பில் அன்றாட சந்தை மதிப்பில், எண்ணெய்யை விற்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

சென்னையில் நிலத்தடி நீர்மட்டம் சற்று உயர்வு!

சென்னை:'பருவ மழைக்குப்பின், சென்னையில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளது. நிலத்தடி நீரில் இருந்த உப்புத்தன்மை அளவும் குறைந்துள்ளது' என, சென்னை குடிநீர் வாரியம் தெரிவித்துள்ளது.தமிழகத்தில், மழைநீர் வீணாவதை தடுக்கும் வகையில், வீடுகள், கட்டடங்கள் தோறும், மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை உருவாக்க, தமிழக அரசு, 2003ம் ஆண்டில் உத்தரவிட்டது. அதன்படி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்பட்டன. சென்னையில் மட்டும், எட்டு லட்சம் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அமைக்கப்பட்டன. பருவ மழைக்கு முன், சீரமைக்க வலியுறுத்தி, சென்னை குடிநீர் வாரியம் சார்பில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. பருவ மழைக்குப்பின், பகுதி வாரியாக, குடிநீர் வாரியம் நடத்திய ஆய்வில், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக உயர்ந்துள்ளதோடு, குடிநீரில் கரைந்திருந்த உப்புத்தன்மையின் அளவும் குறைந்துள்ளது தெரிய வந்து உள்ளது. சென்னையில், பொதுவாக, 4.20 மீட்டராக இருந்த நிலத்தடிநீர் மட்டம், 0.80 மீட்டர் அளவு உயர்ந்து, 3.40 மீட்டர் என்ற அளவில் உள்ளது. அதிகபட்சமாக,

ஆலந்துார் - 2.65 மீட்டர்; பெருங்குடி-1.80, அடையாறு-1 மீட்டர் அளவுக்கு நிலத்தடி மட்டம் அதிகரித்து உள்ளது.ஆலந்துார், பெருங்குடி, சோழிங்கநல்லுார், திருவொற்றியூர், மணலி மற்றும் வளசரவாக்கம் பகுதிகளில் உப்புத்தன்மை, 1,200 பி.பி.எம்., (பாஸ் பர் மில்லியன்) அளவுக்கு உயர்ந்துள்ளது. இது போன்று நிலத்தடி நீர் மட்டம் உயர, பொதுமக்கள் தொடர்ந்து, மழைக்காலத்திற்கு முன், கட்டமைப்புகளை பராமரிக்க வேண்டும் என, சென்னைக்குடிநீர் வாரியம் வலியுறுத்தி உள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பயிர் காப்பீடு செய்ய நாளை மறுதினம் கடைசி**

திருவாரூர், : திருவாரூர் மாவட்டத்தில் நடப்பாண்டு சம்பா மற்றும் தாளடி நெற்பயிர்களுக்கான பயிர் காப்பீடு செய்ய நாளைமறுதினம் கடைசி நாளாகும். திருவாரூர் மாவட்ட வேளாண் இணை இயக்குநர் தனசேகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

திருவாரூர் மாவட்டத் தில் நடப்பு சம்பா மற்றும் தாளடி நெற்பயிர்களுக்கு தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின் கீழ் காப்பீடு செய்ய வரும் 15ந் தேதி கடைசி நாள் என்பதால் விவசாயிகள் உடனடியாக காப்பீடு செய்து கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும் இந்த காப் பீடு திட்டத்தின் கீழ் ஏக்கர் ஒன்றுக்கு ரூ.12 ஆயிரத்து 944க்கு காப்பீடு செய்ய பிரி மியம் தொகையாக ரூ.259 செலுத்த வேண்டும். இந்த பிரிமிய தொகையில் விவ சாய கடன் பெற்ற விவசாயிகளுக்கு 50 சதவிகிதமும், கடன் பெறாத விவசாயிகளு க்கு 55

சதவிகிதமும் மானிய மாக அரசு வழங்குகிறது. எனவே கடன் பெற்ற விவசாயிகள் ஏக்கர் ஒன்றுக்கு பிரிமியத்தொகையாக ரூ.129ம், கடன் பெறாத விவசாயிகள் ரூ.114ம் பிரிமியமாக தொட க்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் அல்லது சேவை பகுதி வணிக வங்கி யில் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### விலைவாசி உயர்வை கண்டித்துதொழிற்சங்கங்கள் ஆர்ப்பாட்டம்

திருவாரூர், : விலைவாசி உயர்வை கட்டுபடுத்த வேண்டும். பொதுத் துறை நிறுவனங்களை தனியார்மயமாக்கலை தடுக்க வேண்டும் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்திநேற்று திருவாரூரில் அனைத்து தொழிற் சங்கங்களின் சார்பில் ஆர் ப்பாட்டம் நடைபெற்றது.

தலைமை தபால் நிலையம் முன்பாக நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏ.ஐ.டி.யு.சி தொழிற் சங்கத்தை சேர்ந்த மாவட்ட பொறுப்பாளர்கள் மார்க்ஸ், பெருமாள், அழகிரி, சி.ஐ.டி.யு.சி சங்கத்தை சேர்ந்த பழனிவேல், முருகையன், ராமகிருஷ்ணன், எல்.பி.எப் சங்கத்தை சேர்ந்த மகாதேவன், முருகேசன், நீலமேகம், ஐ.என்.டி.யு.சி சங்கத்தை சேர்ந்த எஸ்.பாண்டியன், காதர்முகைதீன், எம்.பாண்டியன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் 500க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

### சம்பா, தாளடி பயிரில் இலை சுருட்டுப்புழு கட்டுப்படுத்த பயன்படுத்தும் மருந்து தட்டுப்பாடு விவசாயிகள் அவதி

வலங்கைமான், : வலங்கைமானில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களில் இலை சுருட்டு புழுவினை கட்டுப்படுத்த பயன்படுத்தக் கூடிய மருந்துகள் இல்லாததால் விவசாயிகள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டம் வலங்கைமானில் நடப் பாண்டு சுமார் 14 ஆயிரம் ஹெக்டேரில் சம்பா, தாளடி சாகுபடி செய்யப்பட்டுள் ளது. தற்போது வலங்கை மான் பகுதியில் பனிப் பொழிவு அதிகமாக இருப்ப தாலும், போதிய அளவு மழை

பெய்யாததாலும் நெற்பயிர்களில் இலை சுருட்டு புழு தாக்குதல் அதிகமாக உள்ளது. மொத்த நிலப்பரப்பில் சுமார் 25 சதவீதத்திற்கு மேல் பயிர்கள் இலை சுருட்டு புழுவால் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனை கட்டுப்படுத்த பெப்ரோனிஸ் என்ற மருந்து வேளாண்மை விரிவாக்க மையங்கள் மூலம் 50 சதவீத மானியத்தில் விற்பனை செய்வதாக தமிழ அரசு அறிவித்தது. வலங்கைமான் பகுதியில் மட்டும் சுமார் 3 ஆயிரம் ஹெக்டேர் இலை சுருட்டு புழுவால் பாதிப்படைந்துள்ளது. இவைகளை கட்டுப்படுத்த வலங்கைமான் பகுதிக்கு மட்டும் குறைந்த பட்சம் 2 ஆயிரம் லிட்டருக்கு மேல் மருந்து தேவைப்படுகிறது.

இருப்பினும் வலங்கைமான் வேளாண்மை அலுவலகத்தின் கட்டுப் பாட்டில் உள்ள ஆவூர், அரித்துவாரமங்கலம், ஆலங்குடி உள்ளிட்ட மையங்களுக்கு சுமார் 100 லிட்டர் பெப்ரோனிஸ் மருந்து மட்டுமே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விற்பனை துவங்கிய சில மணி நேரத்திலேயே மானியத்தில் மருந்து விற்பனை முடிவுக்கு வந்தது. இதனை அடுத்து விவசாயிகள் பெரும் ஏமாற்றத்துடன் உள்ளனர். வலங்கைமான் பகுதி யில் மானிய விலை மருந்து விநியோகம் என்பது பெயரளவில் மட்டுமே உள்ளது.

எனவே விவசாயிகளின் நலன் கருதி சாகுபடி செய்யப்பட்டுள்ள சம்பா நெற் பயிர்களை காத்திட தேவை க்கு ஏற்ப தேவையான அளவு மருந்தினை மானிய விலையில் தட்டுப்பாடின்றி வழங்கிட வேண்டுமென விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**கோழி இறைச்சியில் இருந்து மதிப்பூட்டிய பொருள் தயாரிப்பு பயிற்சி**

நீடாமங்கலம், : திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் பொருட்டு கோழி இறைச்சியிலிருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப்பொருள்கள் தயாரித்தல் பயிற்சி நிலைய தலைவர் சோழன் தலைமையில் நேற்று முன்தினம் நடந்தது. நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், நுகர்வோரின் தேவைக்கேற்ப ருசியான மற்றும் தரமான புதிய உணவுப் பொருள்களை கோழி இறைச்சியிலிருந்து தயார் செய்து நியாயமான விலையில் செய்யும் போது நிறைவான வருமானம் கிடைப்பதோடு கோழி வளர்ப்பு தொழில் வளர்ச்சியடையும் என்றார். நிலைய திட்ட உதவியாளர் ரேகா கோழி இறைச்சியிலிருந்து பக்கர் , பஜ்ஜி, பெப்பர் சிக்கன், சிக்கன் உருண்டை மற்றும் கட்லெட் செய்யும் முறையினை செய்முறை விளக்கத்துடன் பயிற்சி அளித்தார். 60க்கும் மேற்பட்ட சுயஉதவிகுழு பெண்கள் மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். முனைவர் தாமோதரன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை இளநிலை ஆராய்ச்சியாளர் சுரேஷ் செய்திருந்தார்.

**நிலக்கடலையில் ஏக்கருக்கு 1250 கிலோ வரை மகசூல் விதைச்சான்று உதவி இயக்குனர் தகவல்**

தர்மபுரி, : தர்மபுரி மாவட்டத்தில் விவசாயிகள் தற்போது இறவை நிலக்கடலை சாகுபடியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த பருவத்தில் டி.எம்.வி 7, வி.ஆர்.ஐ. 2, வி.ஆர்.ஐ 3, டிஎம்.வி. 13 ஆகிய ரகங்களை சாகுபடி செய்யலாம். நிலக்கடலை பயிருக்கு ஏக்கருக்கு 80 கிலோ விதை காய்கள் தேவைப்படும். நிலக்கடலை விதைகளை 30 செ.மீ இடைவெளியில் விதைத்து, ஒரு சதுர மீட்டருக்கு 33 செடிகள் என்ற பயிர் எண்ணிக்கை பராமரிக்க வேண்டும்.

முன்னதாக, நன்கு உழவுசெய் நிலத்தில் 5 மெட்ரிக் டன் மக்கிய தொழு உரத்துடன் 7:14:21 கிலோ தழை, மணி, சாம்பல் சத்துக்கள் தரவல்ல 15 கிலோ யூரியா, 87 கிலோ சூப்பர் பாஸ்பேட், 35 கிலோ பொட்டாஷ் ஆகியன கலந்து அடி உரமாக

இட வேண்டும். விதைகள் மூலம் பரவும் பூஞ்சான நோயை தடுக்க விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்பாக ஒரு கிலோ விதையுடன் 4 கிராம் டிரைகோடெர்மாவிரிடி அல்லது 10 கிராம் சூடோமோனால் புளோரசன்ஸ் அல்லது 4 கிராம் அல்லது 2 கிராம் கார்பன்டசிம் கொண்டு பூஞ்சான விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு கிடைக்க, விதைப்பதற்கு முன் ஒரு ஏக்கருக்கு தேவையான விதையை ரைசோபியம் 2 பாக்கெட் மற்றும் பால்போபேக்டீரியா 2 பாக்கெட்டை ஆறிய அரிசி கஞ்சியுடன் கலந்து உயிரி உர விதை நேர்த்தி செய்து நிழலில் உலர வைத்து விதைக்க வேண்டும்.

நிலக்கடலை பயிரில் நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறையை போக்க, நிலக்கடலை நுண்ணூட்டச்சத்து 5 கிலோவை 20 கிலோ மணலுடன் கலந்து விதைத்து உடன் மண் பரப்பில் தூவ வேண்டும். விதைத்த 40 முதல் 45 ஆவது நாளில் 80 கிலோ ஜிப்சத்தை மண்ணை கொத்தி இட்டு மண் அணைக்க வேண்டும். ஜிப்சத்தில் உள்ள கால்சியம் மற்றும் கந்தகச்சத்து அதிக எண்ணெய் சத்து கொண்ட திரட்சியான காய்கள் அதிக அளவில் உருவாக உதவுகிறது.

மேலும், இதை தவிர்த்து நல்ல வளர்ச்சி அடைந்த முழுமையான பருப்புகளை பெறுவதற்கு ஊட்டச்சத்து கலவையை தெளிக்க வேண்டும். இந்த கலவையை தயாரிக்க ஏக்கருக்கு டிஏபி 1.0 கிலோ அம்மோனியம் சல்பேட் 400 கிராம் மற்றும் போராக்ஸ் 200 கிராம் ஆகியவற்றை 15 லிட்டர் தண்ணீரில் ஒன்றாக கலந்து ஒரு இரவு முழுவதும் வைத்திருக்க வேண்டும்.

மறுநாள் காலை இதை வடிகட்டினால் 12 லிட்டர் வரை தெளிந்த ஊட்டச்சத்து நீர் கிடைக்கும். இதனை 188 லிட்டர் தண்ணீருடன் சேர்த்து 200 லிட்டர் அளவில் தயார் செய்து இதனுடன் 140 மி.லி. பிளானோபிக்ஸ் சேர்த்து விதைத்த 25 மற்றும் 35 ஆவது நாள்களில் தெளிக்க வேண்டும். மேலும், தேவையான இடைவெளியில் நீர் பாய்ச்ச வேண்டும்.

இவ்வாறு செய்தால் மானாவாரி பயிரை விட அதிக எண்ணிக்கையிலான காய்கள், திரட்சியான மணிகளை உற்பத்தி செய்யலாம். அதாவது ஏக்கருக்கு 1000 கிலோ முதல் 1250 கிலோ வரை மகசூல் பெறலாம். விவசாயிகள் வேளா ண்மை விரிவாக்க மையங் களை அணுகி, விதை அலுவலர்களை தொடர்பு கொண்டு விதைப்பண்ணை அமைக் கும் முறை குறித்து முறையாக தெரிந்து கொண்டு, தரமான ஆதார மற்றும் சான்று விதைகளை உற்பத்தி செய்து அதிக லாபம் அடையலாம், “இவ்வாறு உதவி இயக்குநர் கிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

**தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோர பகுதிகளில் கனமழை**



சென்னை: வங்கக் கடலில் உருவான மாதி புயல் வலுவடைந்து அதிராப்பட்டினம் பாம்பன் இடையே நேற்று கடந்ததால் தமிழகத்தின் வட மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது. வங்கக் கடலில் உருவான மாதி புயல் காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறி வேதாரண்யத்திற்கு கிழக்கே 20 கி.மீ தூரத்தில் நிலை கொண்டிருந்தது. இது அதிராப்பட்டினம் பாம்பன் இடையே நேற்று கரையை கடந்தது. இதனால் தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோர பகுதிகளில் கனமழை பெய்து வருகிறது.

தமிழ்நாட்டின் வட மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் மணிக்கு 50 முதல் 60 கி.மீ வேகத்தில் தரைக்காற்று வீசுகிறது. கனமழை காரணமாக விழுப்புரம், கடலூர், காரைக்கால் மாவட்டங்களில் உள்ள பள்ளிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு அரையாண்டு தேர்வுகள் வழக்கம் போல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே போல் புதுச்சேரியில் அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

**கோமாரி நோய் தாக்கி இறந்த மாடுகளுக்கு ரூ25000 இழப்பீடு**

புதுச்சேரி, : திமுக முன்னாள் இளைஞரணி அமைப்பாளரும், முன்னாள் எம்எல்ஏவுமான சிவா வெளியிட்டுள்ள அறிக்கை:

கால்நடைத்துறை மிகுந்த மெத்தன போக்கை கடைபிடித்ததின் விளைவு, கோமாரி நோய் தாக்கி ஆயிரக்கணக் கான கால்நடைகள் பாதிக்கப் பட்டும், சில கால்நடைகள் இறந்து உள்ளன. கடந்த இரண்டு ஆண்டுகளாக கால்நடை மருத்துவமனைகளில் கோமாரி நோய்க்கு மருந்துகள் இல்லாததும் தான் இன்றைய நிலைக்கு முக்கிய காரணம். புதுவை முழுவதும் இது வரை இறந்த கால்நடைகள் மற்றும் பாதிக்கப்பட்ட கால்நடைகள் குறித்து, விரிவான ஆய்வு நடத்தி, எதிர்காலத்தில் இதுபோன்ற பாதிப்புகள் மற்றும் இழப்புகள் ஏற்படாமல் தடுக்க அரசு முன்வர வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு எவ்வித நிவாரணமும் வழங்கப்படாதது கண்டிக்கத்தக்கது. உடனடியாக இந்த அரசு கோமாரி நோயால் இறந்த கால்நடை ஒன்றுக்கு ரூ.25 ஆயிரமும், பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு ரூ.15 ஆயிரமும் இழப்பீடு வழங்க வேண்டும்.

**விவசாய வயல்களுக்கு உரம் வழங்கும் நிகழ்ச்சி**

வில்லியனூர், : புதுவை வேளாண் அறிவியல் நிலையத்தின் சார்பில் விவசாயி களுக்கு முதல் நிலை செயல் விளக்கமும், விவசாயிகளின் வயல்களுக்கு உரங்கள் வழங்கும் நிகழ்ச்சியும் நடந்தது. இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக தொழில் நுட்ப பரிமாற்ற செயல்பாடுகளில் ஒன்றான முதல் நிலை செயல் விளக்கம் புதுவை மாநில விவசாயிகளுக்கு பெருந்தலைவர் காமராஜர் வேளாண் அறிவியல் நிலையத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

செயல் விளக்கத்தின் கீழ் மணிலாவில் ஒருங்கிணைந்த உர நிர்வாகம் என்ற தொழில் நுட்பத்தை விவசாயி களுக்கு அறிமுகப்படுத்தும் வகையில் வேளாண் நிலைய விஞ்ஞானிகள் புதுவையில் உள்ள விவசாய நிலங்களை ஆய்வு செய்து உள்ளனர். இதில் புதுவையில் 13 விவசாயி களின் நிலம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. ஒவ்வொரு விவசாயியின் ஒரு ஏக்கர் நிலத் தில் முதல் நிலை செயல் விளக்கம் செயல் படுத்தப்படும்.

இதில் 6 வகை உரங்களான ஜிப்சம் 160 கிலோ, போராக் 4 கிலோ, நுண்ணூட்ட கலவை 5 கிலோ, ரைசோபியம் 3 கிலோ, பாஸ்போ பாக் டீரியா 3 கிலோ, வி.எம். 3 கிலோ ஆகியவற்றை விவசாயிகளுக்கு நிலைய தலைவர் சுரேஷ் வழங்கினார். வேளாண் அறிவியல் நிலைய முதல்வர் மற்றும் திட்ட ஒருங்கிணைப்பாளர் மோகன், சவேரி, விரிவாக்க இயல் நிபுணர் குமார், சித்த உதவியாளர் பிரபு உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**இடைப்பாடியில் தேங்காய்க்குள் தேங்காய்**

இடைப்பாடி, : இடைப்பாடி அருகே வெள்ளாண்டிவலசை பகுதியை சேர்ந்தவர் தாமரைச்செல்வன், இவர் தனது மனைவி சத்யபிரியாவுடன் நேற்று காலை அங்குள்ள உழவர் சந்தையில் காய்கறிகள் வாங்க சென்றனர். பின்னர் காய்கறிகள் மற்றும் தேங்காய்களை வாங்கிக்கொண்டு வந்தனர். அப்போது தேங்காயை சமையல் செய்ய உடைத்த போது தேங்காய்க்குள் இன்னொரு தேங்காய் இருந்தது தெரிந்தது. உடன் அதை அருகில் உள்ளவர்களுக்கு காண்பித்து மகிழ்ந்தனர்.

**கோமாரி நோய் பீதி மேலப்பாளையம் சந்தை மூடல் 300 மாடுகள் திருப்பி அனுப்பப்பட்டன**

நெல்லை, : கோமாரி நோயால் சந்தை மூடப்பட்டதையடுத்து மேலப்பாளையத்திற்கு வந்த 300 மாடுகள் திருப்பி அனுப்பப்பட்டன.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் மாடுகளுக்கு கோமாரி நோய் பரவி வருகிறது. இதனால், ஏராளமான மாடுகள் இறந்துள்ளன. கோமாரி நோய் தாக்கிய மாடுகளை சந்தை யில் விற்பதாக புகார்கள் வந் தன. நெல்லை மேலப்பாளை யத்தில் வாரம்தோறும் செவ் வாய் கிழமை மாட்டு சந்தை செயல்பட்டு வந்தது. 2 ஆயிரம் மாடுகள் வரை இங்கு விற்பனை செய்யப் படும். தென்காசி, கடையநல்லூர், கோவில்பட்டி மற்றும் வெளியூர்களில் இருந்து வியாபாரிகள் வந்து மாடுகளை வாங்கி செல்வர்.

கோமாரி நோய் தாக்கு தல் எதிரொலியாக, கலெக் டர் உத்தரவின்பேரில் மேலப்பாளையம் சந்தை கடந்த 3 வாரங்களாக மூடப்பட்டுள்ளது. இத னால், மாடுகள் விற்பனை நடைபெறவில்லை. இந்நிலையில், நேற்று மேலப்பாளையம் சந்தைக்கு வெளியூர்களில் இருந்து 300க்கும் மேற்பட்ட மாடுகளை வியாபாரிகள் வாகனங்களில் கொண்டு வந்தனர். சந்தை மூடப்பட்டதால் அவைகளை அருகில் உள்ள ஒரு மைதானத்தில் இறக்கினார்கள்.

இதுகுறித்து மாநகராட்சி அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. மேலப்பாளையம் மண்டல உதவி கமிஷனர் அனிதா மற்றும் இன்ஸ்பெக்டர் ஜெயசேகரன் ஆகியோர் தலை மையில் போலீசார் அங்கு சென்றனர். மாடுகள் விற்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக கூறியதையடுத்து, மாடுகள் அனைத்தையும் வியாபாரிகள் திருப்பி கொண்டு சென்றனர்.

**நோயால் இறந்த இலவச ஆடுகளுக்கு இன்சூரன்ஸ் தொகை வழங்கவில்லை பயனாளிகள் புகார்**

காரைக்குடி, : தமிழக அரசு சார்பில் வழங்கப்பட்ட இலவச ஆடுகள் மார்ம நோயால் திடீர் என இறந்த நிலையில் அந்த ஆடுகளுக்கு இதுவரை இன்சூரன்ஸ் தொகை வழங்கவில்லை என பயனாளிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசு சார்பில் இலவச கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. ஆடுகள் வழங்கும் திட்டத்திற்கு அந்தந்த ஊராட்சி தலைவர், துணை தலைவர், ஒன்றிய அலுவலக பணியாளர் மற்றும் கால்நடைீ மருத்துவர் என ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. இக் குழுவினர்தான் பயனாளிகளை தேர்வு செய்வார்கள்.

இத் திட்டத்திற்கு பயனாளி ஒருவருக்கு ரூ. 12 ஆயிரம் ஒதுக்கப்படுகிறது. இதில் ரூ. 10 ஆயிரத்துக்கு ஒரு கிடா ( ஆண் ஆடு) மற்றும் 3 ஆடுகள் வழங்கப்படும். மீதம் உள்ள ரூ. இரண்டாயிரத்திற்கு ஆடுகளுக்கு கொட்டகை அமைக்க தரப்படுகிறது. அதன்படி காரைக்குடி அருகே கல்லல் யூனியன் குருந்தம்பட்டு கிராமப் பகுதியை சேர்ந்த 50 பயனாளிகளுக்கு கடந்த மே மாதம் 24ம் தேதி 200 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. இதில் மர்மநோய் தாக்கி 70 ஆடுகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இறந்தன.

அதேபோல் ஆடு வழங்கும் போது அரசு சார்பில் இன்சூரன்ஸ் பாலிசி வழங்கப்படும். இதில் ஆடு இறந்து போகும் பட்சத்தில் ஒரு ஆட்டுக்கு ரூ. 2500 வழங்கப்படும். ஆனால் ஆடுகள் இறந்து 6 மாதங்களுக்கு மேல் ஆகியும் இதுவரை வழங்கவில்லை என பயனாளிகள் புகார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தமிழ்நாடு விவசாய சங்க ஒன்றிய செயலாளர் ஆறுமுகம் கூறுகையில்,

ஆடுகளை பயனாளிகள் தேர்வு செய்ய வேண்டும். அதனை கால்நடை

மருத்துவர்கள் முறையாக ஆய்வு செய்து, பின்னர் வியாபரிகளுக்கு உரிய தொகையை காசோலையாக வழங்க வேண்டும். இது நடைமுறை. ஆனால் இந்த நடைமுறையை கால்நடை மருத்துவர்கள் பின்பற்றுவது இல்லை.
இப்பகுதிக்கு மன்னார்குடி மற்றும் மேலூர் பகுதிகளில் இருந்து ஆடுகள் வாங்கி வந்து தந்துள்ளார். ஆடுகள் வழங்கியதோடு சரி இதற்கு சிகிச்சை அளிக்க யாரும் வரவில்லை. இன்சூரன்ஸ் டாக்குமெண்டை பயனாளிகளிடம் வழங்குவதும் கிடையாது. இறந்த ஆடுகளையும் இதுவரை டாக்டர்கள் வந்து பார்க்காமல், தகவல் மட்டும் கேட்டு விட்டு இறந்த ஆட்டின் போட்டோ மற்றும் அரசு முத்திரை டோக்கனை வந்து தருமாறு பயனாளிகளிடமே கூறுகின்றனர்.
இறந்த ஆடுகளுக்கு பிரேத பரிசோதனை செய்வது கிடையாது. ஆனால் இன்சூரன்ஸ் தொகை சென்று கேட்கும் போது மட்டும் பிரேத பரிசோதனை ரிப்போட் கேட்டு காலம் கடத்தி வருகின்றனர். தேவபட்டு, அரண்மனை சிறுவயல், கல்லல், கீழப்பூங்குடி ஆகிய பகுதிகளுக்கு மட்டும் இன்சூரன்ஸ் வழங்கி உள்ளனர். இதுகுறித்து அதிகாரிகளிடம் கேட்டால் முறையாக பதில் தெரிவிப்பது இல்லை என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்த மீனவர்கள் 3 பேர் மாயம்



வேதாரண்யம்,

வேதாரண்யம் அருகே வெள்ளப்பளத்தை சேர்ந்த மீனவர்கள் மீன் பிடிக்க கடலுக்கு சென்றுள்ளனர். மீன் பிடிக்க சென்ற வெள்ளப்பளத்தை சேர்ந்த மீனவர்கள், செல்லப்பாண்டியன், ரகு மற்றும் முருகேசன் ஆகியோர் கரை திரும்பவில்லை. இதனால் கிராம மக்கள் பெரும் அதிர்ச்சி அடைந்துள்ளனர். மீனவர்கள் கோடியக்கரைக்கு தென்கிழக்கே மீன்பிடித்து கொண்டிருந்த போது அவர்கள் மாயமாகியுள்ளனர். தகவலை அடுத்து வெள்ளப்பளத்தை சேர்ந்த மீனவர்கள் கடலுக்கு சென்று மீனவர்களை தேடும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

**விழுப்புரம், கடலூர் மற்றும் புதுவையில் பள்ளிகளுக்கு விடுமுறை**



சென்னை,

வங்ககடலில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலமானது தொண்டி மற்றும் நாகப்பட்டினத்தில் கரையை கடந்தது. விழுப்புரம், கடலூர் மற்றும் புச்சேரியில் கனமழை பெய்துள்ளது. கனமழை காரணமாக கடலூர், விழுப்புரம் மாவட்ட, அரசு மற்றும் தனியார் பள்ளிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. இரண்டு மாவட்டங்களிலும், 10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 அரையாண்டு தேர்வுகள் திட்டமிட்டபடி நடக்கும் என்றும் மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

புதுச்சேரி மற்றும் காரைக்காலிலும் கனமழை காரணமாக பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு ஒரு நாள் விடுமுறை விடப்பட்டுள்ளது.

**காற்றழுத்த தாழ்வு மண்டலம் இன்று கரையை கடக்கிறது அநேக இடங்களில் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு**

சென்னை

குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் வலுவிழந்து இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை அதிராம்பட்டினம்–பாம்பன் இடையே கரையை கடக்கிறது. இதன் காரணமாக அநேக இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

<u>காற்றழுத்த தாழ்வுப்பகுதி</u>

வங்க கடலில் உருவான மேடி புயல் வலுவிழந்து மீண்டும் தமிழகம் நோக்கி வந்தது. இதன் காரணமாக நேற்று புதுச்சேரி, கடலூர், நாகப்பட்டினம் உள்பட பல பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்தது. புதுவை துறைமுகத்தில் 3–ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை.

கடலூர், தஞ்சாவூர், திருவாரூர் போன்ற மாவட்டங்களிலும் பரவலாக மழை பெய்தது. சென்னை மற்றும் புறநகரில் நேற்று அதிகாலை லேசான மழை பெய்தது. பலத்த காற்றும் வீசியது. நாகை மாவட்டத்திலும் நேற்று பரவலாக மழை பெய்தது. கடல் சீற்றத்துடன் காணப்பட்டது.

<u>மீனவர் பலி</u>

நாகையை அடுத்த சாமந்தான் பேட்டையை சேர்ந்த 4 பேர் ஒரு படகில் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். நேற்று அதிகாலை 4 மணியளவில் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது அலையின் சீற்றம் காரணமாக படகு கவிழ்ந்தது. இதனால் 4 பேரும் கடலில் குதித்து நீந்தினர்.

இதில் 3 பேர் மட்டுமே நீந்தி கரைக்கு வந்து சேர்ந்தனர். தவமணி (வயது40) என்பவர் இறந்தார்.

<u>இன்று கரையை கடக்கிறது</u>

சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

வங்கக்கடலில் உருவான மேடி புயல் வடக்கு நோக்கி சென்று, பின்னர் வலுவிழந்து மீண்டும் தமிழகம் நோக்கி நகர்ந்து வந்துள்ளது. அது இப்போது குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலத்தில் இருந்து மேலும் வலு குன்றி தாழ்வுப்பகுதியாக தென்மேற்கு வங்கக்கடலில் வேதாரண்யம் அருகே உள்ளது.

வேதாரண்யம் அருகே அது கரையை கடக்கும். பின்னர் மேற்கு தென்மேற்காக நகர்ந்து மீண்டும் தமிழக கடற்கரையை அதிராம்பட்டினம் – பாம்பன் இடையே தொண்டிக்கு அருகில் இன்று (வெள்ளிக்கிழமை) அதிகாலை கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

<u>அநேக இடங்களில் மழை</u>

இதன் காரணமாக தமிழ்நாட்டில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும். தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் கடலோர பகுதிகளில் சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும். வடக்கு மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் தரைக்காற்றும் மணிக்கு 50 முதல் 60 கிலோ மீட்டர் வேகத்தில் வீசும். இந்த வானிலை 14–ந்தேதி காலை வரை நீடிக்கும். அதன் பின்னர் படிப்படியாக மழை குறையும்.

இவ்வாறு வானிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

<u>பள்ளிகளுக்கு விடுமுறை</u>

காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று கரையை கடப்பதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் இன்று (வெள்ளிக்கிழமை) பள்ளிகளுக்கு விடுமுறை விடப்படுகிறது. ஆனால் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ்–2 அரையாண்டு பொதுத் தேர்வுகள் வழக்கம்போல நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோல புதுச்சேரியிலும் அனைத்து பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு இன்று விடுமுறை விடப்பட்டுள்ளது.

**மாமல்லபுரத்தில் பலத்தக்காற்றுடன் மழை மீனவர்கள் கடலுக்கு செல்லாததால் படகுகள் பாதுகாப்பான இடத்தில் நிறுத்தம்**



மாமல்லபுரம்,

மாமல்லபுரத்தில் பலத்தக்காற்றுடன் மழை பெய்ததால் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. இதனால் படகுகள் பாதுகாப்பான இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டன.

<u>பலத்தக்காற்றுடன் மழை</u>

மாதி புயலால் நேற்று மாமல்லபுரம் கிழக்கு கடற்கரை சாலை பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. மாமல்லபுரம், கொக்கிலமேடு, வெண்புருஷம், பட்டிபுலம், தேவனேரி, நெம்மேலி, சாலவான்குப்பம் உள்ளிட்ட கடற்கரையோரம் உள்ள மீனவர் பகுதிகளில் 50 கிலோ மீட்டர் வேகத்திற்கு பலத்த காற்று வீசியது. நேற்று கடல் சீற்றத்துடன் காணப்பட்டது.

இதனால் 10 அடி உயரத்திற்கு ராட்சத அலைகள் கரைப்பகுதியை நோக்கி சீறிப்பாய்ந்தன.

<u>பாதுகாப்பான இடத்தில்</u>

பலத்த காற்று மற்றும் வானிமை மையத்தின் எச்சரிக்கை காரணமாக சுமார் 2 ஆயிரம் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை.

மேலும் பலத்த காற்று காரணமாக கொக்கிலமேடு உள்ளிட்ட ஒரு சில மீனவர் பகுதியில் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகுகள் காற்றின் காரணமாக ராட்சத அலையில் சிக்கி கடலுக்கு இழுத்து செல்லப்பட்டன.

உடனடியாக மீனவர்கள் கடலுக்கு நீந்தி சென்று படகுகளை கரைப்பகுதிக்கு கொண்டு வந்து பாதுகாப்பான இடங்களில் கொண்டு சென்று கயிறு கட்டி பாதுகாத்து வருகின்றனர்.

**கோமாரிநோயை தடுக்க 7½ லட்சம் மாடுகளுக்கு தடுப்பூசி**

ஆரணி,

திருவண்ணாமலை மாவட்டத்தில் 7½ லட்சம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப் பூசி போட ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய் யப்பட்டது.

ஆலோசனை கூட்டம்

திருவண்ணாமலை மாவட் டம், ஆரணி கால்நடை மருத் துவ உதவி இயக்குனர் அலு வலகத்தில் மாவட்ட கால் நடை துறை இயக்குனர் டாக் டர் ராஜேந்திரன் தலைமையில் ஆரணி, செய்யாறு, வந்தவாசி ஆகிய தாலுகா பகுதிகளில் உள்ள கால்நடை மருத்துவர் கள் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்புக்காக 2-வது கட்டமாக வரும் மார்ச் மாதம் 1-ந்தேதி முதல் 31-ந் தேதி வரை தொடர்ந்து கிராமந்தோறும் கோமாரி நோய் தடுப்பூசி போடுவதற்கு முகாம்கள் நடத்த வேண்டும். அதற்காக ஊராட்சி தலை வர்களுக்கும், ஒன்றிய அலு வலர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்படும்.

ஒரு மாதம் பயிற்சி

கடந்த மாதங்களில் தமிழ் நாடு முழுவதும் கால்நடை களை கோமாரி நோய் தாக் கப்பட்டதாக சொல்லப்பட்ட நேரத்தில் திருவண்ணாமலை மாவட்டத்தில் கால்நடை மருத்துவர்களை கொண்டு சிகிச்சை வழங்கப்பட்ட மாடு கள்

காப்பாற்றப்பட்டன. வரும் முகாமின் போது 7லட்சத்து 52ஆயிரம் மாடு களுக்கு தடுப்பூசி போடுவ தற்கு, மருத்துவர் மற்றும் கால்நடை துறை ஆய்வா ளர்கள், உதவியாளர்களுக்கு ஒரு மாதம் பயிற்சி தரவேண் டும் என்று வலியுறுத்தப் பட்டது.

**கோழித்தீவனத்தில் ஈரப்பதம் கொண்ட மக்காச்சோளம் – சோயாபுண்ணாக்கு பயன்படுத்துவதில் கவனம் தேவை**

கோழித் தீவனத்தில் ஈரப்பதம் கொண்ட மக்காச்சோளம் மற்றும் சோயா புண்ணாக்கு பயன்படுத்துவதில் கோழிப்பண்ணையாளர்கள் கவனத்துடன் செயல்பட வேண்டும் என வானிலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

**ஆராய்ச்சி நிலையம்**

நாமக்கல் மாவட்டத்தில் இன்றும், நாளையும் நிலவும் வானிலை குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

அடுத்த 2 நாட்கள் வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இன்று மழை பெய்ய வாய்ப்பு இல்லை. நாளை 5 மி.மீட்டர் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. காற்று இன்று 3 கி.மீ. வேகத்திலும், நாளை 4 கி.மீ. வேகத்திலும் வடக்கு திசையில் இருந்து வீசும். வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 87.8 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக 68 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 69, 73 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 40, 48 சதவீதமாகவும் இருக்கும்.

**சிறப்பு வானிலை**

அடுத்த 2 நாட்களுக்கான வானிலையில் வானம் லேசான மேகமூட்டத்துடனும், ஒரிரு இடங்களில் லேசான மழை பெய்வதற்கான வாய்ப்புடனும் காணப்படும். வங்காள விரிகுடாவில் தோன்றி வலுப்பெற்ற புயல் சின்னத்தினால், வடக்கில் இருந்து காற்று வீசும். மேலும் அந்த புயல் சின்னம் கடலிலேயே வலுவிழக்க கூடிய

வாய்ப்புகள் உள்ளது. ஆகையால் உள் மாவட்டமான நாமக்கல் மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் நாளை மறுநாள் மட்டுமே லேசான மழைக்கு சாத்தியம் உள்ளது. கோழிப்பண்ணையாளர்கள் கோழித் தீவனத்தில் அதிக ஈரப்பதம் உடைய மக்காச்சோளம் மற்றும் சோயா புண்ணாக்கு ஆகியவற்றை பயன்படுத்துவதில் கவனம் கொண்டு, தீவனத்தில் பூஞ்சை நச்சு ஏற்படாவண்ணம் பார்த்து கொள்ள வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

**நாமக்கல்லில் 2 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.40 லட்சத்துக்கு ஏலம்**



நாமக்கல்லில் ஏலத்துக்கு வந்த பருத்தி மூட்டைகளை படத்தில் காணலாம்.

நாமக்கல்லில் 2 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.40 லட்சத்துக்கு ஏலம் போனது.

பருத்தி

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு, துணைத் தலைவர் நல்லதம்பி மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் ஏலம் நடந்தது.

இந்த ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப் பேட்டை, ராசிபுரம் என மாவட்டம் முழுவதும் இருந் தும், அண்டை மாவட்டங் களில் இருந்தும் விவசாயிகள் ஏறத்தாழ 2 ஆயிரம் மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். ரூ.40 லட்சத்துக்கு ஏலம்

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.40 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரத்து 260 முதல் ரூ.4 ஆயிரத்து 990 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி ரூ.6 ஆயிரத்து 500 முதல் ரூ.6 ஆயிரத்து 906 வரைக்கும் ஏலம் போனது.இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணா புரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர். குளிர்கால சீஷன் தொடங்கி உள்ளதால், இனிவரும் காலங் களில் பருத்தி வரத்து அதிகரிக் கும் என கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை தாழ்வான பகுதியில் மழை நீர் தேங்கியது**

கடலூர்,

வங்கக்கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையால் கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதியில் மழை நீர் தேங்கி நின்றது. பரவலாக மழை

வடகிழக்கு பருவ மழை கடலூர் மாவட்டத்தில் எதிர்பார்த்த அளவுக்கு பெய்ய வில்லை. இருப்பினும் சமீபத்தில் உருவான 2 புயல் சின்னத்தால் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. இந்நிலையில் தற்போது உருவமான மேடி புயல் வலுவிழந்து, குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறியது. இதன்காரணமாக கடலோர மாவட்டங்களில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்து இருந்தது. அதன்படி நேற்று அதிகாலை முதல் கடலூர் மாவட்டத்தில் பரவலாக மழை பெய்தது. லேசான சாரலுடன் ஆரம்பித்த மழை சற்று நேரத்தில் கன மழையாக பெய்ய ஆரம்பித்தது. இதனால் காலையில் பள்ளி, கல்லூரி செல்லும் மாணவ– மாணவிகள் மழையில் நனைந்தபடியும், குடைபிடித்த படியும் சென்று வந்தனர். இதனால் வேலைக்கு செல்லும் அரசு அலுவலர்கள் முதல் கூலி தொழிலாளர்கள் வரை அனைவரும் சிரமத்துடன் சென்றனர். இந்த மழையினால் சாலையோர கடைவியாபாரிகள் வியாபாரம் முடங்கியது.

<u>தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது</u>

இதனால் லாரன்ஸ் ரோடு, கடலூர்– சிதம்பரம் சாலை, புதுப்பாளையம், சில்வர்கடற்கரை சாலை போன்ற முக்கிய சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. தாழ்வான பகுதிகளில் மழை நீர் தேங்கி நின்றது. இந்த மழை மதியம் 1 மணி வரை நீடித்தது. மதியம் 1 மணிக்கு பிறகு மழை இல்லை. அதன்பிறகு மாலை 4 மணிக்கு பிறகு லேசான சாரலுடன் மழை தொடர்ந்து பெய்ய ஆரம்பித்தது.

பண்ருட்டியில் காலை 5 மணி முதல் மிதமான மழை பெய்ய தொடங்கியது. அந்த மழையானது நிற்காமல் தொடர்ந்து மதியம் 12 மணிக்கு மேலும் நீடித்தது. இதனால் இரு சக்கர வாகன ஓட்டிகள், தரை கடைவியாபாரிகள், பொது மக்கள் பாதிப்படைந்தனர். குறிப்பாக காலையில் பள்ளி, கல்லூரிகளுக்கு சென்ற மாணவ–மாணவிகள் மழையால் பெரும் அவதி அடைந்தனர்.

<u>விருத்தாசலம்</u>

விருத்தாசலம் பகுதியில் கடந்த சில நாட்களாக மழை ஏதும் இன்றி வறண்ட வானிலையே நிலவி வந்தது. இந்த நிலையில் நேற்று அதிகாலை முதல் பரவலாக மழை பெய்ய தொடங்கியது.

காலை முதலே சாரல் மழையாக பெய்து கொண்டிருந்தது. இதனால் அலுவலகங்கள், கல்லூரி, பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் பெரும் அவதி அடைந்தனர். தொடர்ந்து மழையுடன் குளிர்ந்த காற்றும் அவ்வபோது வீசி வந்தது. இடைவிடாது தூரல் போட்டுக்கொண்டிருந்த மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. மதியம் 2 மணிக்கு பிறகு பலமான காற்று வீசியது.

விருத்தசாலத்தை சுற்றியுள்ள பெண்ணாடம், மங்கலம்பேட்டை, நெய்வேலி போன்ற பகுதிகளிலும் லேசான மழை பெய்தது.

<u>சிதம்பரம்</u>

சிதம்பரம் பகுதிகளில் நேற்று காலை 6 மணி முதல் லேசான சாரல் மழை பெய்ய தொடங்கியது. காலை 10 மணிக்கு பிறகு காற்றுடன் தொடங்கிய மழை மதியம் 1 மணி வரை நீடித்தது. இதனால், தாழ்வான பகுதிகளான படித்துறை இறக்கம், கீழசன்னதி, வடக்குவீதி, தங்கரத தெரு, காந்திசிலை, பஸ் நிலையம், எஸ்.பி. கோவில் தெரு பகுதி சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. மழையையும் பொருட்படுத்தாமல் மாணவ– மாணவிகள் குடை பிடித்தபடி நடந்து சென்றனர்.

மேலும், இருசக்கர வாகனங்களில் சென்ற வாகன ஓட்டிகள் மழை கோட்டு அணிந்து சென்றதை காண முடிந்தது. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. வேளக்குடி, பழைய நல்லூர் ஆகிய பகுதியில் விவசாயிகள் பயிரிட்டு இருந்த பன்னீர்கரும்புகள் சாய்ந்தன. இதேபோல் காட்டுமன்னார்கோவில், குமராட்சி, புவனகிரி, சேத்தியாத்தோப்பு, பரங்கிப்பேட்டை ஆகிய பகுதிகளிலும் சாரல்மழை தொடர்ந்து பெய்து வருகிறது.

**கடும் பனிப்பொழிவால் விளைச்சல் பாதிப்பு: திருச்சியில் மல்லிகைப்பூ விலை ‘கிடு கிடு’ உயர்வு ஒரு கிலோ ரூ.700–க்கு விற்பனை**



திருச்சி,

கடும் பனிப்பொழிவால் மல்லிகைப்பூ விலை கிடு கிடு என உயர்ந்து ஒரு கிலோ ரூ.700–க்கு விற்பனையாகிறது.

<u>மல்லிகைப்பூ விளைச்சல் பாதிப்பு</u>

பண்டிகை, சுப முகூர்த்தம், திருமணம் போன்ற நிகழ்ச்சிகளுக்கு மல்லிகைப்பூவை பெண்கள் அதிக அளவில் பயன்படுத்துவது உண்டு. இந்த நிலையில் கடந்த சில நாட்களாக கடும் பனிப்பொழிவால் மல்லிகை பூ விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளதால் விலை பல மடங்கு உயர்ந்துள்ளது. இதனால் மல்லிகைப்பூவை பெயரளவுக்கு மட்டுமே பெண்கள் தலையில் வைக்கின்றனர்.

திருச்சியில் சோமரசம்பேட்டை, அல்லித்துறை, ஜீயபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் மல்லிகைப்பூ விளைச்சல் காணப்படுகிறது. இங்கு விளையும் மல்லிகைப்பூக்கள் திருச்சி காந்திமார்க்கெட் மற்றும் ஸ்ரீரங்கம் பூ மார்க்கெட்டிற்கு விற்பனைக்காக விவசாயிகள் கொண்டு வருவார்கள். இங்கு மொத்த வியாபார கடைகளில் இருந்து சில்லறை வியாபாரிகள் வாங்கி சென்று கடைகளில் விற்பனை செய்வது வழக்கம்.

<u>ஒரு கிலோ ரூ.700</u>

இந்த நிலையில் கார்த்திகை மாதம் தொடங்கியதில் இருந்து கடும் பனி பொழிவின் காரணமாக மல்லிகைப்பூ விளைச்சல் மிகவும் பாதிப்படைந்துள்ளது. இதனால் மார்க்கெட்டிற்கு பூக்கள் வரத்து மிகவும் குறைந்து மல்லிகைப்பூ விலை இரு மடங்காக உயர்ந்துள்ளது. திருச்சி காந்திமார்க்கெட்டில் நேற்று ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.700–க்கு விற்பனையானது. சில்லறை கடைகளில் முழம் கணக்கில் விற்பனை செய்வதற்கு பதிலாக எண்ணிக்கை கணக்கில் மல்லிகைப்பூவை விற்பனை செய்கின்றனர். பனிகாலம் இல்லாத போது நன்கு விளைச்சல் உள்ள நேரங்களில் ஒரு கிலோ ரூ.150 முதல் ரூ.200 வரைக்கும் விற்பனையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது முகூர்த்த நேரம் என்பதால் மல்லிகைப்பூவிற்கு கடும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. ஆனால் வரத்து குறைவால் விலைகள் ஏறிக்கொண்டே செல்வதாக திருச்சி காந்திமார்க்கெட் பூ வியாபாரி ஒருவர் தெரிவித்தார். மேலும் கடும் பனிப்பொழிவால் கனகாம்பரம் வரத்து முற்றிலும் குறைந்ததாகவும் அவர் கூறினார்.

<u>பூக்கள் விலை</u>

திருச்சி காந்தி மார்க்கெட்டில் நேற்றைய பூக்கள் விலை விபரம் வருமாறு:– கனகாம்பரம்– ரூ. 600, முல்லை பூ– ரூ.500, சாதி பூ–ரூ 300 முதல் ரூ.400 வரையும், காட்டுமல்லி–ரூ.250, செவ்வந்தி– ரூ.80, சம்மங்கி– ரூ. 100, வாடாமல்லி–ரூ.28.

**ஆண்டிப்பட்டி பகுதியில் மழையின்றி வாடிய மானாவாரி பயிர்கள் விவசாயிகள் கவலை**



சண்முகசுந்தரபுரம் விலக்கு பகுதியில் மழையின்றி வளர்ச்சிஅடையாத சோளப்பயிரை படத்தில் காணலாம்.

ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் பருவமழை ஏமாற்றி வருவதால் மானாவாரி பயிர்கள் வளர்ச்சி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயி கள் கவலை அடைந்துள் ளனர்.

மானாவாரி பயிர்கள்

தேனி மாவட்டம், ஆண்டிப் பட்டி சுற்றுவட்டாரத்தில் உள்ள சண்முகசுந்தரபுரம், ரெங்கசமுத்திரம், முத்தனம் பட்டி, க.விலக்கு, பிராதுகாரன் பட்டி ஆகிய பகுதிகளில் மானாவாரி பயிர்கள் அதிகம் பயிரிடப்படுகிறது. குறிப்பாக இந்த பகுதிகளில் சோளம் அதிகமாக பயிரிடப் படுகிறது.

மழைக்காலம் தொடங்கு வதற்கு முன்பாக நிலத்தை தயார் செய்து விவசாயிகள் சோளம் சாகுபடி செய்வார் கள். மழைக்காலம் முடிவதற்கு முன்பு மானாவாரி பயிர்கள் அறுவடை செய்யப்பட்டு விடும்.

அதன்படி கடந்த ஜூன் மாதம் தென்மேற்கு பருவ மழையை நம்பி ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் மானாவாரி பயிர்கள் பயிரிடப் பட்டது. ஆனால் தென்மேற்கு பருவமழை போதுமான அளவு பெய்யாததால் சாகுபடி செய்யப்பட்ட சோளப்பயிர் கள் வளர்ச்சியின்றி கருகியது. இதனால் சோளக்காடுகளில் விளைந்திருந்த செடிகளை கால்நடைகளின் மேய்ச்சல் நிலமாக விவசாயிகள் பயன் படுத்தினர்.

மழை ஏமாற்றம்

இந்நிலையில் வடகிழக்குப் பருவமழையை எதிர்பார்த்து, அக்டோபர் மாதத்தில் ஆண்டிப்பட்டி சுற்றுவட்டார பகுதிகளில் விவசாயிகள் மீண்டும் சோளம் பயிரிட்ட னர். ஆனால் வடகிழக்குப் பருவமழை காலம் தொடங்கி 3 மாதங்கள் முடிவடையும் நிலையில் இதுவரை போது மான மழை பெய்யவில்லை.

இதன்காரணமாக இந்த முறையும் பயிர்கள் கருக தொடங்கிஉள்ளது. பெரும் பாலான இடங்களில் பயிர்கள் போதுமான வளர்ச்சி அடை யாமல் காணப்படுகிறது. இதனால் இப்பகுதி விவசாயி கள் ஏமாற்றம் அடைந்ததுடன், நஷ்டமடையும் சூழ்நிலையும் உருவாகிஉள்ளது.

மழையின்றி வளர்ச்சி அடையாமல் காணப்படும் பயிர்களை இந்த முறையும் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தீவனமாக மாறும் நிலை உருவாகி உள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந் துள்ளனர்.

**<u>ஹைவேவிஸ் மலைப்பகுதியில் தேயிலை தோட்டத்தொழிலாளர்கள் போராட்டம் நீடிக்கிறது</u>**



உத்தமபாளையம்,

ஹைவேவிஸ் மலைப் பகுதியில்தேயிலை தோட்டத் தொழிலாளர் களின் வேலை நிறுத்த போராட்டம் நேற்று 3-வது நாளாக நீடித்தது. சாலை சீரமைக்கும் பணி நேற்று மாலை வரை தொடங்காத நிலை யில் இந்த போராட் டம் தொடரும் என்று தோட்டத் தொழிலாளர் கள் அறிவித்தனர்.

சேதம் அடைந்த சாலை

தேனி மாவட்டத்தில் உள்ள பிரசித்திப்பெற்ற சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக மேகமலை எஸ்டேட் பகுதி உள்ளது. ஹைவேவிஸ் பேரூராட்சி பகுதிக்கு உட்பட்ட மண லாறு, மேல் மணலாறு, வென் னியாறு, இரவங்கலாறு, மகாராஜா மெட்டு ஆகிய பகுதி களை உள்ளடக்கிய இந்த மேகமலையில் தேயிலை தோட்டங்களும், தடுப்பணை களும் என இயற்கை அழகு கொட்டிக்கிடக் கிறது.

இந்த தேயிலைத்தோட்ட பகுதியில் உள்ள சாலைகளை தமிழக அரசின் நெடுஞ்சாலைத்துறையினர் கையகப் படுத்தி உள்ள நிலையில் கடந்த பல ஆண்டுகளாக இந்த சாலை சீரமைக்கப்படாமல் குண்டும், குழியுமாக போக்கு வரத்துக்கு பயன்படுத்த முடி யாத நிலையில் காட்சி அளிக் கிறது.

பஸ் கவிழ்ந்ததுசமீபத்தில் இந்த பகுதியில் மலைச்சாலையில் சென்ற அரசு பஸ் கவிழ்ந்து 23 பேர் படுகாயம் அடைந் தனர். இதை அடுத்து உயிர்ப்பலி வாங்கும் அளவிற்கு மிகப் பெரிய விபத்துகள் நடப்பதற்கு முன்பு உடனடியாக சாலை சீரமைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி கடந்த 10-ந் தேதி முதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத் தில் சுமார் 3 ஆயிரம் தேயிலை தோட்ட தொழிலாளர்கள் ஈடுபட தொடங்கினர்.நேற்று முன்தினம் போராட் டத்தில் ஈடுபட்ட தொழிலாளர் களிடம் பேச்சுவார்த்தை நடத்த வந்த வருவாய்த்துறை அதிகாரிகளை தொழிலாளர் கள் முற்றுகையிட்டு போராட் டம் நடத்தினர். குண்டும், குழியுமான சாலையை உடனடியாக சீரமைக்கும் வரை இந்த போராட்டம் தொடரும் என்று தொழிலாளர் கள் அறிவித்தனர்.

இருப்பினும் நேற்று காலையில் சாலை சீரமைப்பு பணி தொடங்காததை அடுத்து நேற்று 3-வது நாளாக தேயிலை தோட்டத்தொழி லாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தை தொடர்ந்த னர். இந்த சாலை அமைக்கும் பணி முடியும் வரை போராட் டம் தொடரும் என்றும் தோட்டத் தொழிலாளர்கள் உறுதியாக அறிவித்துள்ளனர்.

**தேனி மாவட்டத்தில் ஏமாற்றும் பருவமழையால் பரிதவிக்கும் விவசாயிகள்**



உத்தமபாளையம்,

தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை ஏமாற்றி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

விவசாயம்

தேனி மாவட்டம் விவசாயம் சார்ந்த மாவட்டமாக உள்ளது. லோயர்கேம்ப் பகுதியில் தொடங்கி பழனிசெட்டிபட்டி வரையிலான பகுதி கம்பம் பள்ளத்தாக்கு பகுதியாக காட்சி அளிக்கிறது. இந்த பகுதிகளில் முல்லைப்பெரி யாற்று நீரை ஆதாரமாக கொண்டு சுமார் 15 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இருபோக சாகுபடி நடைபெறுகிறது. இதேபோன்று மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் வைகை அணை, மஞ்சளாறு மற்றும் சோத்துப்பாறை அணைகளை நீர் ஆதாரமாக கொண்டு விவசாயம் நடை பெறுகிறது. மேலும் 18-ம் கால்வாய் மூலம் தேவாரம் பகுதிகளில் விவசாயம் நடக்கிறது.

இவ்வாறு விவசாய வளம் கொழிக்கும் தேனி மாவட் டத்தில் சாகுபடி செய்யப்படும் விளை பொருட்களான நெல், வாழை, திராட்சை, கரும்பு உள்ளிட்ட பயிர்கள் வெளி மாவட்டங்களுக்கு விற்பனைக் காக அனுப்பப்படுகிறது. இந்நிலையில் இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை முல்லைப்பெரியாறு அணைப் பகுதியில் மட்டுமே ஓரளவு பெய்தது. இதனால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் முதல் போக சாகுபடி பிரச்சினை யின்றி முடிவுக்கு வந்துள்ளது. அதே நேரத்தில் வடகிழக்கு பருவமழையை நம்பி மாவட் டத்தின் மற்ற பகுதிகளில் உள்ள விவசாயிகள் பயிர் சாகுபடியில் ஆர்வம் காட்டுவது வழக்கம் ஆகும்.

பருவமழை ஏமாற்றம்

ஆனால் வடகிழக்கு பருவ மழை தொடர்ந்து பெய்யாமல் ஏமாற்றி வருவதால் தேனி மாவட்ட விவசாயிகள் பயிர் சாகுபடி செய்ய முடியாமல் மிகுந்த மன வேதனை அடைந் துள்ளனர். முல்லைப்பெரி யாறு அணை நீர்மட்டமும் குறைவாக உள்ளதால் கம்பம் பள்ளத்தாக்கு பாசன விவ சாயிகளும் இரண்டாம் போகம் நிறைவு பெறுமா? என்று கேள்விக்குறியுடன் நெல் நடவுப்பணிகளை மேற் கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக ஐப்பசி மாதம் பெய்ய வேண்டி பருவமழை ஒரு சில தினங்கள் மட்டும் பெயரளவில் பெய்து சென்று விட்டதால், இந்த பருவமழை தொடர்ந்து பெய்யுமா? விவசாயம் செழிக்குமா என்ற கவலையுடன் விவசாயிகள் ஏமாற்றம் கலந்த எதிர்பார்ப் புடன் வானத்தை பார்த்த வண்ணம் உள்ளனர். விவசாயி களின் கவலை தீர வருண பகவான் பருவமழையாக பெய்து விவசாயத்தை காப் பாற்ற வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

**தேனி அருகே கால்நடை முகாமில் தடுப்பூசி போடப்பட்ட மாடு பலி கிராம மக்கள் இடையே பீதி**



பாலார்பட்டியில் கால்நடை முகாம் நடந்த நிலையில், கோமாரி நோய் தாக்கி இறந்த பசுமாட்டை படத்தில் காணலாம்.

உப்புக்கோட்டை,

தேனி அருகே பாலார் பட்டியில் நேற்று முகாம் நடைபெற்ற போது சிகிச்சை அளிக்கப்பட்ட மாடு பலியான சம்பவம் கால்நடை வளர்ப்போர் இடையே பீதியை ஏற்படுத்தி உள்ளது.

கோமாரி நோய்

தேனி மாவட்டத்தில் ஜெயமங்கலம், எரணம்பட்டி, கடமலைக்குண்டு மலைக் கிராமங்கள், தேனி அருகே உள்ள பாலார்பட்டி, உப்பார் பட்டி ஆகிய கிராமங்களில் கோமாரி நோய் தாக்கி மாடு கள் அடுத்தடுத்து பலியானது. இந்த கிராமங்களில் கால்நடை களுக்கு நோய் பாதிப்பை தடுக்க கால்நடைத்துறை சார்பில் பல்வேறு கட்ட மருத்துவமுகாம்கள் நடத்தப் பட்டன.

இந்நிலையில் கடந்த 2 தினங்களுக்கு முன்பு பாலார் பட்டியில் கோமாரி நோய் தாக்கி 2 மாடுகள் பலியானது. மேலும் 20-க்கும் மேற்பட்ட மாடுகள் நோய் பாதிப்புக்குள் ளானது. இது குறித்து தகவல் கிடைத்ததும், கால்நடைத் துறை சார்பில் பாலார்பட்டி கிராமத்தில் நேற்று சிறப்பு கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமில் 20-க்கும் மேற்பட்ட மாடு களுக்கு சிகிச்சைகள் அளிக்கப் பட்டது.

மாடு பலி

இந்த முகாம் நடைபெற்ற போது, பாலார்பட்டி காலனி தெருவைச் சேர்ந்த தொந்தி (வயது 47) என்பவருக்கு சொந்தமான மாட்டிற்கும் தடுப்பூசி போட்டுள்ளனர். பின்னர் அந்த மாடு அருகில் உள்ள வயல்வெளியில் மேயச் சென்ற போது அங்கேயே இறந்து விட்டது. முகாம் நடைபெற்ற போது, கோமாரி நோய் தாக்கி மாடு பலியான சம்பவம் அந்த கிராமத்தில் கால்நடை வளர்ப்போர் இடையே பீதியை ஏற்படுத்தி உள்ளது.

இதனிடையே உப்புக் கோட்டை அருகே உள்ள சடையால்பட்டியில் பால் பாண்டி என்பவருக்கு சொந்தமான மாடு ஒன்றும் கோமாரி நோய் தாக்கி நேற்று பலியாகி உள்ளது. தொடர்ந்து மாடுகள் இறந்து வரும் நிலையில் கால்நடைத் துறையினர் நோய் பாதித்த மாடுகளை காப்பாற்ற உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்பது கால்நடை வளர்ப்போரின் எதிர்பார்ப் பாக உள்ளது.

**நிலத்தடி நீரை பாதுகாப்பது குறித்த பயிற்சி முகாம்**



உடன்குடி நகர பஞ்சாயத்து மண்டபத்தில் மத்திய நிலத்தடி நீர் வாரியம் சார்பில், நீர் மேலாண்மை குறித்த பயிற்சி முகாம் 2 நாட்கள் நடந்தன. மாவட்ட திட்ட இயக்குனர் பெல்லா தலைமை தாங்கி, குத்துவிளக்கு ஏற்றி முகாமை தொடங்கி வைத்தார். வேளாண்மை இணை இயக்குனர் தட்சிணாமூர்த்தி முன்னிலை வகித்தார். மத்திய நிலத்தடி நீர்வாரிய மண்டல இயக்குனர் சம்பத்குமார் வரவேற்று பேசினார். வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அமுதன், பொதுப்பணித்துறை நிலவியல் உபகோட்ட உதவி செயற்பொறியாளர்

ராஜேந்திரன், குடிநீர் வடிகால் வாரிய உதவி நிலநீர் நிபுணர் கணபதி சுப்பிரமணியன், மத்திய நிலத்தடி நீர் வாரிய விஞ்ஞானிகள் பிரம்மநாயகம், பன்னீர், கோபிநாத் ஆகியோர் பேசினர். உடன்குடி பகுதியில் குறைந்து வரும் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் மற்றும் பண்ணை குட்டைகள், கசிவு குட்டைகள், நீர் பிடிப்பு குளங்கள், தடுப்பு அணைகள் அமைப்பது குறித்து விளக்கம் அளித்தனர். பின்னர் விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதில் அளித்தனர். யூனியன் தலைவி ஜெ.மல்லிகா, துணைத் தலைவர் கே.வி.ராஜதுரை, மாவட்ட பம்புசெட் விவசாய சங்க தலைவர் பொன்.ராமநாத ஆதித்தன், செயலாளர் ஆறுமுகபாண்டியன் உள்பட திரளானவர்கள் கலந்து கொண்டனர். சுப்புராஜ் நன்றி கூறினார்.

**ஸ்ரீவைகுண்டத்தில் விவசாயிகள் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டம் அதிகாரிகள் நடத்தியபேச்சுவார்த்தையில் உடன்பாடு**



ஸ்ரீவைகுண்டத்தில் விவசாயிகள் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டம் தொடங்கினார்கள். ஆனால் அதிகாரிகள் நடத்திய பேச்சுவார்த்தையில் உடன்பாடு ஏற்பட்டு, போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டது.

உண்ணாவிரதம் மருதூர் அணையில் இருந்து 4–வது பைப் லைன் அமைக்கும் திட்டத்தை கைவிட வலியுறுத்தி, ஸ்ரீவைகுண்டம் தாலுகா அலுவலகம் முன்பு விவசாயிகள் நேற்று காலையில் காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை தொடங்கினார்கள். போராட்டத்துக்கு தாமிரபரணி நதிநீர் பாதுகாப்பு பேரவை அமைப்பாளர் நயினார் குலசேகரன் தலைமை தாங்கினார்.

இந்திய கம்யூனிஸ்டு மாவட்ட செயலாளர் மோகன்ராஜ், வடகால் பாசன ஒருங்கிணைப்பு குழு தலைவர் சம்பத், முன்னாள் நகர பஞ்சாயத்து தலைவர் கந்த சிவசுப்பு, ம.தி.மு.க. அவைத் தலைவர் காசிராஜன், நகர செயலாளர் வள்ளிமுத்து, மேலக்கால் நீர் பகிர்மான தலைவர் அலங்காரம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

ஒத்தி வைப்பு

மாலை 6.45 மணியளவில் தூத்துக்குடி உதவி கலெக்டர் நாகஜோதி, ஸ்ரீவைகுண்டம் துணை போலீஸ் சூப்பிரண்டு ராமராஜன், தாசில்தார் காமாட்சி தாசன் ஆகியோர் உண்ணாவிரதம் இருந்தவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது சென்னையில் நடைபெற்று வரும் கலெக்டர்களின் மாநாட்டில் விவசாயிகளின் கோரிக்கைகள் குறித்து தெரிவிக்கப்பட்டு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் உறுதி அளித்தனர்.

இதையடுத்து காலவரையற்ற உண்ணாவிரத போராட்டத்தை தற்காலிகமாக ஒத்தி வைப்பதாக தெரிவித்தனர். பின்னர் அனைவரும் கலைந்து சென்றனர்.

**தேன்கனிக்கோட்டையில் பீன்ஸ் விலை வீழ்ச்சி கிலோ ரூ.10–க்கு விற்பனை**



தேன்கனிக்கோட்டை

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை சுற்று வட்டாரத்தில் விவசாயிகள் பெருமளவில் வசித்து வருகிறார்கள். இவர்கள் பீன்ஸ், தக்காளி, கேரட் போன்ற காய்கறி வகைகளும், நெல், ராகி போன்ற பயிர்களும் பயிரிட்டுள்ளனர்.

கடந்த வாரம் வரையில் பீன்ஸ் கிலோ ரூ.22–க்கு விற்கப்பட்டது. பின்னர் அது படிபடியாக குறைந்தது. நேற்று தேன்கனிக்கோட்டை உழவர் சந்தையில் பீன்ஸ் கிலோ ரூ.10–க்கு விற்கப்பட்டது.

இது குறித்து விவசாயிகள் சிலர் கூறும் தற்போது பீன்ஸ் விளைச்சல் அதிகமாக உள்ளது. மேலும் மார்கழி மாதம் விரைவில் தொடங்க உள்ளது. இந்த மாதத்தில் முகூர்த்த நாட்கள் அதிகம் இல்லை. இதனால் பொங்கல் பண்டிகை வரையில் காய்கறிகள் விலை அதிகமாக வாய்ப்புகள் இல்லை என்றனர். இதே போல தக்காளி கிலோ ரூ.14 முதல் 16 வரையும், வெண்டைக்காய் கிலோ ரூ.16 முதல் 19 வரையும் விற்கப்பட்டது.

**தஞ்சையில் தொடர் மழை**



தஞ்சாவூர், -

தஞ்சையில் நேற்று தொடர்ந்து மழை பெய்து கொண்டே இருந்தது.

<u>வடகிழக்குப்பருவமழை</u>

தமிழகத்தில் இந்த ஆண்டு வடகிழக்குப்பருவமழை போதிய அளவு பெய்யவில்லை. இருப்பினும் அவ்வப்போது மழை பெய்து கொண்டே வருகிறது. இந்த நிலையில் வங்கக்கடலில் உருவான மேடி புயல் காரணமாக தமிழகத்தில் நேற்று பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. தஞ்சை மாவட்டத்தில் நேற்று காலை முதலே லேசான தூறலுடன் மழை பெய்தது. அவ்வப்போது பலத்த மழையும் பெய்தது. இந்த நிலையில் விட்டு விட்டு, மழை தூறிக்கொண்டே இருந்தது. தஞ்சை மாவட்டத்தில்

ஒரத்தநாடு, வெட்டிக்காடு, தஞ்சை, பட்டுக்கோட்டை, வல்லம் உள்பட பல்வேறு பகுதிகளிலும் காலைமுதலே மழை பெய்து கொண்டே இருந்தது.

<u>இயல்பு வாழ்க்கை பாதிப்பு</u>

தஞ்சை மாவட்டத்தில் தற்போது சம்பா, தாளடி நெல் சாகுபடி பணிகள் இறுதிக்கட்டத்தை எட்டி உள்ளது. இந்த நிலையில் மழை பெய்து வருவது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியது. தொடர்ந்து இடைவிடாது மழை தூறிக்கொண்டே இருந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிக்கப்பட்டது. காலையில் மழை தூறியதால் பள்ளி செல்லும் மாணவ, மாணவிகள் மழையில் நனைந்து கொண்ட சென்றனர்.

**புதுவையில் கடல் சீற்றம்**



புதுச்சேரியில் இன்று கடல் அதிக சீற்றத்துடன் காணப்பட்டது. புதுவை வம்பாக்கீரப்பாளையம் பகுதியில் ராட்சத அலைகள் சீறிவந்து கரையில் மோதிய காட்சி.